Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்

கண்ணோட்டம்

KANNODDAM

கண்ணோட்டம்

வெளியீடு :- 72 | 01 ஜூன் 2016 | விலை ரூபா :- 10.00

நம்பிக்கை தரும் மாற்றங்கள் நிகழுமா?

அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கான மக்கள் குழு நாடு முழுவதும் பரவலான அமர்வுகளை நிகழ்த்தியது அறிந்ததே.

அரசியல் யாப்புச் சீர்திருத்தம் தொடர்பான அவர்களின் பரிந்துரைகளின் சாரமாக இருந்த சில விடயங்கள்:

- பரவலாக சமூக வாழ்வின் சகல அம்சங்களிலும் "ஜனநாயக மயப்படுத்தல்" என்ற சொற்பதம் உபயோகிக்கபட்டுள்ளது.
- எந்த ஒரு மதத்திற்கும் சிறப்பு சலுகைகள் இருக்க கூடாது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மதச்சார்பின்மை அல்லது சகல மதங்களையும் சமமாக நடத்துவது என்ற பதப்பிரயோகம் மக்கள் குழு அங்கத்தவர்கள் பலரின் பரிந்துரைகளில் பிரதானமாக இருந்திருக்கிறது.

- இனப்பிரச்சனை தீர்வு தொடர்பில் "அதிகாரப் பேரளிப்பு" பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு அதிகாரப் பேரளிப்பு என்ற சொற்பதம் அதிகாரப்பரவலாக்கல் என்ற சொற்பதத்திற்கு மாற்றாக உபயோகிக்கப்படுகிறது. அதிகாரப் பகிர்வு அல்ல.

அதற்கான செயன்முறை அளவு என்பவற்றில் மாறுபாடுகள் காணப்படுகின்றன.

"ஒற்றை ஆட்சி" என்ற சொற்பதம் உபயோகிக்கபடும் பட்சத்தில் நீதி மன்றத்திற்கு செல்ல வேண்டிய நிலைமைகளில் அது மத்திய அரசுக்கே சாதகமாக அமையும் என்று அரசியல் சட்ட அனுபவ முள்ள உறுப்பினர்கள் சிலரால் சுட்டிக்காட்டப்பட்டது.

(தொடர்ச்சி 9 ம் பக்கம்)

சவால்கள் மத்தியில் எம்முடன் இமயமென நின்றவர்

தோழர் பத்மநாபா திருமண நிகழ்வில்

தோழர் பத்மநாபா ஞாபகார்த்த மலர் வெளியீட்டுக்கு தலைமை ஏற்று

எம்முடன் இமயம் என நின்றிருந்தவர் ஸ்டாலின் அண்ணன். சமூகமாற்றத்துடன் இணைந்த ஈழவிடுதலைக்கு கைமாறு கருதாது உழைத்த மனிதர். உயர்ந்த வசிகரமான அந்த மனிதருக்கு ஸ்ராலின் என்று பெயரிட்டவர் ஈ.வெ.ரா பெரியார். ஒரு சட்டதரணியான ஸ்ராலின் அண்ணன் (வயது 75) முழுதாகவே சமூக அரசியல் பணிகளில் ஈடுபட்டவர். மார்க்சியம்-பெரியாரியம் இரண்டையுமே தனது வழி காட்டல் கொள்கைகளாக வரித்துக் கொண்டவர்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த எமக்கு கும்பகோணம் - தஞ்சாவூர் அதன் சுற்றயல் கிராமங்களில்

(தொடர்ச்சி 3 ம் பக்கம்)

26 ஆவது தியாகிகள் தினம்

ஜூன் 19

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் தமிழ் சமூகத்தில் ஜனநாயகத்திற்காகவும், உழைக்கும் மக்களின் விடிவிற்காகவும் தம் உயிரை அர்ப்பணித்த தோழர்கள், சக இயக்கப் போராளிகள், பொதுமக்கள் அனைவரையும் நினைவு கூரும் தினம்

பத்மநாபா மக்கள் முன்னணி (PPF)

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி (SDPT)

தோழர் குமார் தம்பிலுவில்

தோழர் சிவா கல்லாறு

தோழர் ஜோர்ச் திருகோணமலை

தோழர் ஜயா கண்ணாட்டி

தோழர் பெஞ்சமின் பொகவந்தலாவை

தோழர் கதிர் கிளிநொச்சி

தோழர் கொட்வின் புதுக்குடியிருப்பு

தோழர் ரெட்ணம் வங்காலை

தோழர் கபூர் பருத்தித்துறை

தோழர் நிதி அக்கரைப்பற்று

தோழர் மதன்லால் மூதூர்

தோழர் சாரங்கன் மருங்கன்

தோழர் ரஞ்சித் கஞ்சுவாஞ்சிக்குடி

தோழர் முகுந்தன் மூளாய்

தோழர் சுந்தர் முல்லைத்தீவு

தோழர் அருள் மண்டூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்
KANNODDAM
294, கண்டிவீதி, புங்கன்குளம் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022

மத்திய மாகாண அரசுகளுக்கு இடையிலான உறவு நிலை

மாகாண மத்திய அரசுகளுக்கிடையிலான உறவு நிலை சுமுகமாக்கப்பட வேண்டும். மாகாணத்துக்குரிய அதிகாரங்கள் முழுமை பெற வேண்டும். அதிகாரங்களை பரவலாக்குவது தொடர்பான புரிதலில் தான் இந்த உறவுகள் அர்த்தம் பெறுகின்றன.

என்னதான் சட்டங்களை உருவாக்கினாலும் யாப்பு சீர்திருத்தங்களை மேற்கொண்டாலும் அவற்றை நடைமுறைப் படுத்துவதில் நேர்மையான உணர்வுதான் மத்திய அரசு மட்டத்தில் தேவைப்படுகின்றது.

மாகாண அரச கட்டமைப்பு இலகுவாக இயங்குவதற்கு மத்திய அரசு உதவ வேண்டும். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண சபையின் பிரதிநிதிகள் முதலமைச்சர் உட்பட அவர்களின் அதிகார எல்லைகள் கண்ணியம் என்பன பாதிக்கப்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்று உலகிற்கு பறைசாற்றுவதானால் அது மிக மிக அவசியமாகும். மாகாண மட்டத்தில் ஆட்சியில் இருப்பவர்களும் தங்களது அதிகாரங்கள் பற்றிய புரிதல் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

காரியமாற்றக் கூடிய இடங்களில் எல்லாம் தமது உரிமைகளை அதிகாரங்களை பிரயோகிக்க வேண்டும்.

சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, சாலைவசதி, சிறு தொழில் துறைகளை உருவாக்குவது, விவசாயம், மீன்பிடி துறைகளை விருத்தி செய்வது உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பது விலைவாசியை கட்டுப்படுத்துவது பல்லாயிரக்கணக்கான பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் நிலைமையை மேம்படுத்துவது உள்ளூராட்சி சபைகளை உருப்படியாக இயங்கச் செய்வது குடிநீர் மற்றும் பாசனத்திற்கான நீர்வளங்களை அபிவிருத்தி செய்வது என எத்தனையோ காரியங்களை ஆற்ற முடியும்.

மாகாணம் மற்றும் இணக்கப்பாட்டு நிரலில் உள்ள விடயங்களுக்கான நிறைவேற்று அதிகாரங்களை பிரயோகிக்க முயல வேண்டும்.

தவிர 300க்கும் மேற்பட்ட நியதிச் சட்டங்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் இவ்வளவு காலமும் எடுக்கப்படாதது துரதிஸ்டமானதாகும்.

கிழக்கின் முதல்வர் நஸீர் அஹமட் அண்மையில் எதிர் நோக்கிய அசௌகரியங்கள், அவமானங்கள் இனிமேலும் தொடரக்கூடாது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண அரசின் முதலமைச்சரின் கண்ணியத்திற்கு, சுயமரியாதைக்கு பங்கம் எற்படுத்துவதற்கான காரியங்கள் சகித்துக்கொள்ளப்பட முடியாதவை.

இலங்கையின் சிறுபான்மை தேசிய இன சமூகங்களின் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைவர்களின் சிறப்புரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களை அவமதிப்பது சமூகத்தை அவமதிப்பதும் ஆகும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள் கிளிநொச்சியில் உள்ள ஒரு படைமுகாமிற்கு சென்றதும் சில மாதங்களுக்கு முன்னர் ஒரு அனாவசியமான சர்ச்சையாக்கப்பட்டது.

இனவாத, இராணுவவாத அதிகாரத்துவமான இத்தகைய செயற்பாடுகள் சமூக நல்லிணக்கத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும்.

2015 இல் நிகழ்ந்த ஆட்சிமாற்றம் பல்லின மக்களின் பங்களிப்புடன் நிகழ்ந்தது. இதனை மனதிலிருத்தியாக வேண்டும்.

வெவ்வேறு சமூகங்களின் தலைவர்கள் இணைந்து செயற்பட வேண்டிய காலத்தில் மேலாதிக்க மனோநிலை அதிகார மட்டத்தின் எந்த இடத்திலிருந்து வருவதும் நல்ல சகுனமல்ல.

இணைந்து செயற்படுவதற்கான ஏதுநிலைகளை உருவாக்குவதும் மாகாண சபைகள் சுமுகமாகச் செயற்படுவதற்கு வழி சமைப்பதும் மத்திய அரசின் பொறுப்பும் கடமையுமாகும்.

மத்திய மாகாண அரசுகள் இணைந்து செயற்படுவதற்கான இடைவெளி எவ்வளவு தூரம் இருக்கின்றதே அந்தளவுக்கு தான் இந்த நாடு சமூக பொருளாதார துறைகளில் முன்னேற முடியும்.

இறுதிவரை கொள்கைப் பற்றுறுதியுடன் வாழ்ந்தவர்

அமரர் சிவா சுப்பிரமணியத்திற்கு தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி அஞ்சலி

28.05.1942 29.05.2016

யாழ்ப்பாணம் அச்சுவேலியை பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான தோழர் சிவா சுப்பிரமணியம் (வைத்திலிங்கம் சிவசுப்பிரமணியம்) 29.05.2016 அன்று இயற்கை எய்தினார்.

இலங்கை இடதுசாரி இயக்கத்தின் வரலாற்றில் தோழர் சிவா சுப்பிரமணியத்திற்கு சிறப்பு வாய்ந்த இடமுண்டு.

மிக இளம் வயதிலேயே இடதுசாரி இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு தொழிலாளர்கள், விவசாயிகள், இளை ஞர்கள், மாணவர்கள், கல்வியாளர்கள் மற்றும் வெவ்வேறு சமூக அரசியல் இயக்கங்களுடன் இணந்து ஒரு பொதுவுடமை வாதியாக தொழிலாளர்கள் மற்றும் இன சமூக ஒடுக்கு முறைக்குள்ளானோரின் சமூக பொருளாதார அபிலாசைகளை வென்றெடுப்பதற்காக இடையறாது முயன்றவர்.

மிக நீண்ட காலமாகவே எழுதி வருபவர். சமூக அரசியல் பிரக்ஞை அவரது எழுத்துக்களில் இழையோடும். அவர் பத்திரிகை ஆசிரியராகவும் செயற்பட்டவர். மும்மொழி களிலும் சரளமான பரிச்சயமுள்ளவர். இலங்கையின் தலைசிறந்த மொழிபெயர்ப்பாளர்களில் ஒருவர்.

சர்வதேசியவாதி. தோழர்கள் பீற்றர்கெனமன், வைத்திலிங்கம், எம்.சி சுப்பிரமணியம், பூபாலசிங்கம், வி பொன்னம்பலம் உட்பட எண்ணற்ற மறைந்த மற்றும் இன்றும் வாழும் தோழர்களுடன் பணியாற்றியவர்.

அவர் கடுமையாக பாரதூரமாக நோய்வாய்ப்பட்டபோதும் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று இடையறாது உழைத்தவர்.

சுடர் மிகும் அறிவுடன் கொள்கைப் பற்றுறுதியுடன் சமூக மாற்றம் குறித்த புரட்சிகர கனவுகளுடன் இறுதி மூச்சுவரை வாழ்ந்தவர் தோழர் சிவா. அவருக்கு எம் இதய அஞ்சலிகள்.

மார்க்சிஸ்ட் கட்சி தலைவரின் வாக்குறுதி



மக்களின் பங்கேற்புடன் தேர்தல் வாக்குறுதிகளை இடது ஜனநாயக முன்னணி(எல்.டி.எப்) அமல்படுத்தும் என்றும் முற்றிலும் ஊழலற்ற, வெளிப்படையான ஆட்சியை எல்.டி.எப்பிடமிருந்து மக்கள் எதிர்பார்க்கலாம் என்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் வி.எஸ்.அச்சுதானந்தன் கூறினார். மலம்புழா தொகுதியில் 23,142 வாக்குகள் வித்தியாசத்தில் பா.ஜ.க வேட்பாளரைத் தோற்கடித்த அச்சுதானந்தன், கேரள சட்டமன்றத் தேர்தலில் இடது ஜனநாயக முன்னணிக்கு மகத்தான வெற்றியை தேடித்தந்த வாக்காளர்களுக்கு இதயப்பூர்வமான நன்றியை தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியிருப்பதாவது: மக்கள் ஒப்படைத்துள்ள பெரும் பொறுப்பை பெருமையுடன் ஏற்றுக் கொள்கிறோம். கேரளத்தின் பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும், வளங்களையும் பேணிப் பாதுகாக்கவும் வளர்க்கவும் செய்வோம் என்று நாங்கள் உறுதியளிக்கிறோம். கடந்த ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆட்சிக் காலத்தில் நடமாடிய மக்கள் விரோத அணுகுமுறைகளை முற்றிலும் மாற்றி அமைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். கிராமசபை முதல் மக்களின் உணர்வுகளை அறிந்து கொள்வதற்கான எல்லா அமைப்புகளையும் பயன்படுத்திக் கொள்வோம். இது எங்கள் கடமையாகும். கேரளம் மட்டுமே உரிமை பாராட்டும் பல்வேறு சாதனைகள் உண்டு. அவற்றைக் காப்போம். அத்துடன் பல்வேறு பிரச்சினைகளையும் சவால்களையும் கேரளா எதிர்கொள்கிறது. அவற்றில் மிகவும் முக்கியமானது கேரளம் முழுவதற்கும் குறிப்பாக இளைஞர்களுக்கும் ஒரு வளமான எதிர்காலத்தை உத்தரவாதப்படுத்த வேண்டும் என்பதாகும். அதுபற்றி எல்.டி.எப்பின் தேர்தல் அறிக்கையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் மத்தியில் ஆளும் பாஜக அரசும் மற்ற பிற்போக்கு அரசியல் சக்திகளும் பல்வேறு பிரச்சனைகளை எங்களுக்கு எதிராக உருவாக்குவார்கள் என்பதை நாங்கள் அறிவோம். அவற்றையும் மக்கள் பங்கேற்புடன் வலுவாக நாங்கள் எதிர்கொள்வோம் என்றும் அச்சுதானந்தன் கூறியுள்ளார்.

தோழர்களே! நண்பர்களே! வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும் ,
ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும் :-

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

EPIC
P.O. Box 431
Sutton SM1 9LE
UK
email: eprlfp@yahoo.co.uk

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

294, கண்டி வீதி
யாழ்ப்பாணம்.
021 2222022

165, கடல்முக வீதி,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை:
பயன்படுத்து முடியாத நிலையில் விளையாட்டு மைதானம்

திருகோணமலை நகரத்தில் அமைந்திருக்கும் மக்கேசர் விளையாட்டு மைதானம் நீண்ட நாட்களாக பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் பாவனையின்றி உள்ளது. நகரசபையிடமிருந்து இவ்விளையாட்டு மைதானத்தை பொறுப்பேற்றுக் கொண்ட நகர அபிவிருத்தி அமைச்சு அங்கிருந்த ஒல்லாந்தர் காலத்து கட்டிடத்தை இடித்துத் தள்ளியிருக்கிறது. இதன் புனரமைப்பு பணிகள் ஆட்சி மாற்றத்தின் பின்னரும் மந்த நிலையில் இருப்பதால் விளையாட்டுக் கழகங்கள் பயிற்சிகளை மேற் கொள்வதற்கும், பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கும் சிரமப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் விளையாட்டு மைதானம் கால காலமாக நகரசபையின் பராமரிப்பில் இருந்தது. இம் மைதானத்தில் திருகோணமலை மாவட்டத்தின் எல்லா பாடசாலைகளும் விளையாட்டு போட்டிகளை நடத்துவதற்கு நகர சபை அனுமதி வழங்கி வருவது வழமை. இதனால் பாடசாலைகளும் விளையாட்டு கழகங்களும் குறைந்த செலவில் போட்டிகளை நடாத்த முடிந்தது. தற்சமயம் இடையூறுகளும் செலவும் அதிகம் எனத் தெரிவிகப்படுகிறது. இதனால் மைதானத்தை நகர அபிவிருத்தி அமைச்சு நகர சபையிடமே ஒப்படைக்க வேண்டுமென்று விளையாட்டு கழகங்கள் மத்தியில் கருத்து நிலவுகிறது.

அத்துடன் இந்த வருடம் விளையாட்டு அமைச்சினால் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானங்களுக்கான நிதி ஒதுக்கீடானது பிரதேசவாதக் கண்ணோட்டத்துடன் அல்லது இனபாகுபாட்டு உணர்வுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்ற கேள்வியை தோற்றுவித்துள்ளது.

ஒதுக்கப்பட்ட நிதியின் விபரம்

1) மூதூர் விளையாட்டு மைதானம் - 30 லட்சம்
2) தோப்பு விளையாட்டு மைதானம் - 30 லட்சம்
3) அல்ஹம்ரா விளையாட்டு மைதானம் - 10 லட்சம்
4) இரக்ககண்டி அல்ஹம்ரா விளையாட்டு மைதானம் - 20 லட்சம்
5) குச்சவெளி அல்நூரிய்யா விளையாட்டு மைதானம் - 20 லட்சம்
6) தம்பலகாமம் பொது விளையாட்டு மைதானம் - 20 லட்சம்
7) பாயும் மீன்கள் விளையாட்டு கழகம் - 20 லட்சம்

இந்த விளையாட்டு மைதானங்களுக்கான நிதி மாகான சபை உறுப்பினர் லாஹிரின் வேண்டுகோளுக்கு இனங்க, விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரிஸினால் 150 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எம்முடன் இமயமென...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பெரும் ஆதரவுத்தளத்தை ஏற்படுத்தித் தந்தவர்.

நீங்கள் ஆயிரம் என்ன பத்தாயிரம் பேர் வந்தாலும் அத்தனை பேருக்கும் இருப் பிடமும், உணவும், பாதுகாப்பும் வழங்கு வேன் எனப் புன்முறுவலுடன் சாதாரண மாக தன்னம்பிக்கையுடன் மலையென நின்று காரியமாற்றியவர்.

இனம்புரியாத வசீகரமும் ஈர்ப்பும் அவரின் வார்தைகளில் கலந்திருக்கும். அவர் தோழரே என அழைக்கும் போதும் அரது நடைமுறைகளிலும் அது தெளிவாக பிரதிபலிக்கும். மிக மிக எளிமையான மனிதர் அவர்.

அவரது இறுதிப் 10 ஆண்டுகள் புற்றுநோயுடன் போராடியபடி சமூகப் பணி செய்தார்

அவர் சவால்கள், நெருகடிகள். வறுமை என எல்லா நிலைகளிலும் எம்முடன் நின்றவர். தெம்பூட்டியவர். தன்னம்பிக்கை ஏற்படுத்தியவர்.

அவரின் குடும்பத்தினர், உற்ற சுற்றத் தினர், தோழர்கள், ஊரவர்கள் எல்லோ ரும் எம்முடன் தோழமை நட்பு பாராட்டி னார்கள்.

கும்பகோணத்தைப் பொறுத்தவரை ஈபிஆர்எல்எப் பாரம்பரியம் "ஊர் கூடி இழுத்த தேர்".

"இங்கிவரை நாம் பெறவே என்ன தவம் செய்துவிட்டோம்" என்ற உணர்வை ஏற்படுத்தியவர் ஸ்ராலின் அண்ணை.

இன்னொரு நாட்டில் இருந்து அடைக் கலம் புகுந்த எமக்கு தஞ்சை தரணி யையே திரட்டி ஆதரவு நல்கியவர்.

தோழர் நாபாவின் ஆத்மார்த்த தோழர், நண்பர்.

முற்போக்கு, பெரியாரிய பகுத்தறிவு இயக்கம்- எமது போராட்ட வரலாற்றின் பிரிக்கமுடியாத பாகம்.

சமூகம் பற்றிய அவரது பார்வை விசாலமானது. அவரது வாழ்வும் - பணியும் தனியாக பதிவு செய்யப்பட வேண்டியது. பதிவு செய்வோம்

அவரது குடும்பம் பிள்ளைகளுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்டாலின் அண்ணைக்கு எம்புரட்சிகர அஞ்சலிகள்



கனடா:

மூன்று புத்தகங்களின் வெளியீடு

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட மூன்று போராளிகளின் புத்தகங்களின் வெளியீடும் மதிப்புரையும் மே மாதம் 15ம் திகதி ரொறன்ரோவில் நடைபெற்றது. முன்னாள் போராளிகள் பொதுமக்கள் இலக்கிய ஆர்வாலர்கள் என பலதரப்பினரும் கலந்து கொண்ட இந் நிகழ்வு மாலை 2 மணிக்கு ஆரம்பமாகி 6 மணிக்கு நிறைவு பெற்றது. புத்தக வெளியீட்டுடன் கூடிய மதிப்புரையும் நடைபெற்றது. நேசன் தலமையில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு நிகழ்வு எல்லாளனின் நன்றியுரையுடன் முடிவுற்றது.

முதலில் சீலனின் "வெல்வோம் அதற்காக" என்ற புத்தக வெளியீடும் மதிப்பீட்டுரையும் நடைபெற்றது. சபேசன் முதலாவதாக மதிப்பீட்டுரையை வழங்கினார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தனிநாட்டுக் கோரிக்கை தவறான ஒரு முடிவு என்றும் மக்களை அரசியல் மயப்படுத்தாத ஆயுதப் போராட்டத்தின் வெளிப்பாடுகள்தான் விடுதலை அமைப்புக்குள் எற்பட்ட உட்கட்சிப் படுகொலைகளுக்கான முக்கிய காரணமாக அமைந்தது என்றும் இதனை தனது அனுபவப் பகிர்வாக சீலன் பதிவு செய்ததை குறிப்பிட்டார். இவரைத் தொடர்ந்து பேசிய தர்சன் ஈழ விடுதலை அமைப்பிற்குள் ஆயுதம் ஏந்தியவர்கள் போராளிகளாக இருந்தார்கள் என்பதை விட அவர்கள் சிப்பாய்களாக செயற்பட்டார்கள். இதுவே கேள்வி கேட்காமல் தமது தலமை சொன்னவற்றை செயற்படுத்த முயன்று உள் கட்சிப் படுகொலை, இயக்கத் தவறுகளாக பரிணாமம் அடைய வாய்பு எற்பட்டது என்று குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து பாஸ்கரனின் கவிதை தொகுபிற்கான வெளியீடும் மதிபீட்டுரையும் நடைபெற்றது. மதிப்பீட்டுரையை ஜேம்ஸ் சிவா ஈஸ்வரமூர்த்தி நிகழ்த்தினார். அவர் தமது மதிப்பீட்டுரையில் எழுத்துக்கள் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் செய்திகளை காவி வருவது சிறந்ததாக அமையும். ஆனால் பாஸ்கரன் கவிதைப் புத்தகம் முழுவதும் நம்பிகையீனங்களை, தோல்விகளை விதைத்து சென்றிருக்கின்றது என்ற கருத்துரைத்தார். மேலும் ஊழிக்காற்று என்ற சொற்பதம் அதிகம் இவ் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றிருப்பதையும் சுட்டிக் காட்டினார். மேலும் காதலில் ஆரம்பித்து, புலம்பெயர் தேசத்து மக்களின் வாழ்நிலை, பத்திரிகைகளின் சமூகக் கடமையை தட்டிக் கழிக்கும் செயற்பாடுகள், மத்திய கிழக்கில் எம்மவர்கள் படும் துன்பங்கள், யுத்தம் முடிவுற்ற எமது தேசத்தின் இன்றை நிலை, ஈழத்து உழைக்கும் வர்க்கத்தின் முன்னெற்றம் அடையாத நிலமைகள் என்று பலதளத்திலும் தமது கவிதைப் புனைவுகளை மேற்கொண்டிருக்கின்றார் என்று குறிப்பிட்டார்.

இறுதியாக எல்லாளனின் "ஒரு தமிழீழப் போராளியின் நினைவுக்குறிப்பு" என்ற புத்தகத்தின் வெளியீடும் மதிபீட்டுரையும் நடைபெற்றது. புத்தகத்திற்கான மதிப்பீட்டுரையை இருவர் நிகழ்த்தினர். சரிநிகர் பத்திரிகையில் 1990 களில் முதன் முதலில் இப்பதிவு தொடராக வெளிவந்த போது பணியாற்றிய விக்னேஸ்வரன் தனது மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார். இவரைத் தொடர்ந்து தோழர் ஜேம்ஸ் சிவா ஈஸ்வரமூர்த்தி தனது மதிபீட்டுரையை நிகழ்த்தினார். ஈழவிடுதலைப் போராட்டத்தில் 1983 கால கட்டங்களில் ஆயுத மோகங்களினால் இயக்கங்களில் இணைந்த யதார்த்த நிலமையை மிகச்சரியாக பதிவிட்டிருக்கின்றார் எல்லாளன் என்றார்.

மேலும் தமிழீழ விடுதலைப் போராடத்தில் ஆரம்ப காலகட்டத்திலேயே ஒரு அமைப்பிற்குள் ஊடுருவி தலைவர்களை கொலை செய்யும் கலாச்சாரத்தை உருவாக்கியவர்கள் முள்ளிவாய்காலுக்கான அத்திவாரத்தை அன்றே போட்டு விட்டார்கள் என்றார். இந்த புத்தகத்திலிருக்கும் அனுபவப் பகிர்வுகளிலிருந்து தன்னால் பகுத்தாய்வு செய்யக் கூடியதாக இருப்பது அதுவே. எல்லாளன் பதிவு செய்திருத்த விடயங்களுடன் ஜேம்ஸ் அவர்களும் சமகாலத்தில் பயணித்திருப்பதினால் இந்த புத்தகத்திலுள்ள தகவல்களின் உண்மைத் தன்மையை தன்னால் உறுதி செய்யக் கூடியதாக இருப்பதாகவும் குறிப்பிட்டார். மேலும் தனது இரண்டாவது பதிப்பை வெளியிடும் காலத்தில் நினைவுக்குறிப்புகளுடன் இதற்கான சமகால வரலாற்று பதிவுகளையும் சேர்த்து இணைப்பது இந்த புத்தகம் மேலும் செழுமையடைய வாய்பாக இருக்கும் என்றார்.

உலகில் அநியாயம் நடக்கும் ஒவ்வொரு சமயமும் அடக்க முடியாத ஆத்திரத்தினால் உங்களால் குமுறிக் கொந்தளிக்க முடிந்தால் நாம் தோழர்களே!

சே குவேரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறுமா?

யூன் 23ம் திகதி வாக்கெடுப்பு

அன்பார்ந்த வாசகர்களே,

ஜனநாயகத்தின் தாய் என வர்ணிக்கப்படும் பிரித்தானியாவில் முதிர்ச்சி அடைந்த ஜனநாயக அரசியல் சிக்கலான காலங்களில் எவ்வாறு முடிவுகளை மேற்கொள்கிறது? என்பதை அறிவதற்கு இது நல்ல தருணமாகும். அரசியலில் ஆர்வம் கொண்டவர்கள் தற்போது பிரித்தானியாவை நோக்கி தமது பார்வைளைச் செலுத்துவது சிறந்த அனுபவமாகும்.

எதிர்வரும் யூன் மாதம் 23ம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறுவதா? இல்லையா? என மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இவ் வாக்கெடுப்பை ஆளும் கட்சியான கன்சவேட்டிவ் கட்சி தாமாகவே முன்வந்து நடத்துகிறது. கன்சவேட்டிவ் கட்சிக்குள் ஐரோப்பாவில் தொடர்ந்து இருப்பது குறித்து இந்த இரண்டு போக்கு தொடர்ந்து காணப்பட்டது. இதனால் அக் கட்சியின் பிரதமரால் ஐரோப்பிய ஒன்றிய கூட்டங்களில் தன்னிச்சையான முடிவுகளை மேற் கொள்ள முடியாமல் இருந்தது. வெளியேறவேண்டும் என வற்புறுத்துவர்கள் பலமான பாராளுமன்ற அரசியல் பலத்தைக் கொண்டிருப்பதால் அரசு முக்கியமான தீர்மானங்களை எடுக்க அவர்கள் ஒத்துழைக்க மறுத்தால் அரசு சுமுகமாக இயங்க முடியாத நிலை ஏற்படும். ஒரே கட்சிக்குள் ஐரோப்பிய ஒன்றியம் தொடர்பாக முற்றிலும் எதிர் எதிர் நிலைப்பாடுள்ளவர்கள் பலமான அளவில் உள்ளனர். இதே போன்று பிரதான எதிர்க்கட்சியான தொழிற் கட்சிக்குள்ளும் இவ்வாறான போக்கு உள்ளது. இதனால் இச் சிக்கலைத் தீர்ப்பது நாட்டின் எதிர்காலத்திற்கு அவசியம் என்பதால் கன்சவேட்டிவ் கட்சி வாக்கொடுப்பை நடத்தத் தீர்மானித்தது.

இலங்கையில் குறிப்பாக தமிழர் தரப்பில் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்ற அவாவோடு வாழ்பவர்கள் பலர். அவர்கள் எதிர்பார்ப்பது போன்று வெளிநாட்டு வாழ்க்கை பொருளியல் சுகத்தை ஓரளவு தந்த போதிலும் மனித ஆத்மா விரும்பும் நிம்மதியை அது தரவில்லை. மனிதனும் யந்திரமும் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டு இறுதியில் அமைதியற்ற வாழ்வே எஞ்சியிருப்பதாக கவலைப்படுவோரும் உள்ளனர். இதற்கான காரணங்களை அறிய வேண்டுமெனில் இத் தேர்தலில் முன்வைக்கப்படும் வாதங்கள் புலம் பெயர்ந்து வாழ்வோருக்கு தரும் அச்சங்கள் குறித்து அறிந்தாலே போதுமானவை. உதாரணமாக இவ் வாக்கெடுப்பு தொடர்பாக பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்களில் ஒரு சாரார் மத்தியிலே இவ் வாக்கெடுப்பு அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தியிருக்கிறது எனக் கூறினால் அதில் எதுவும் மிகைப்படுத்தல் இல்லை. ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த தமிழர்கள் பலர் தமது பிள்ளைகள் ஆங்கில மொழிக் கல்வியைப் பெற்றால் உலகில் எப் பாகத்திலும் சென்று பிழைத்துக் கொள்வார்கள் என்ற நோக்கில் ஐரோப்பிய ஒன்றிய வாய்ப்புகளைப் பயன்படுத்தி பிரித்தானியாவில் ஏனைய ஐரோப்பிய நாடுகளின் கடவுச் சீட்டுகளுடன் ஐரோப்பிய பிரஜை என்ற காரணத்தால் வாழ்கிறார்கள். தற்போது நடைபெறும் தேர்தல் வாதங்கள் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறலாம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அவ்வாறானால் தாமும் மீண்டும் மூட்டை, முடிச்சுகளோடு பழையபடி அங்கு செல்ல வேண்டி வருமே என்ற அச்சம் குடி கொண்டுள்ளது. அவ்வளவுக்கு ஐரோப்பிய எதிர்ப்பு அலைகள் ஊடகங்களை நிறைத்து வருகின்றன. இதனால் அச்சமுற்ற பலர் ஏற்கெனவெ பிரித்தானிய பிரஜா உரிமை பெற்று வாழும் தமிழர்களிடம் வெளியேற வாக்களிப்பீர்களா? என வினவும் அளவுக்கு நிலமைகள் மாறி வருகின்றன. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறுமா? எனத் தமிழர்கள் கவலைப்படும் அளவுக்கு மோசமான அரசியல் உள்ளதா? என நீங்கள் வினவக்கூடும். முதலிலே அவ்வாறான போக்கின் அடிப்படைக் காரணங்களை அறிவது அவசியம்.

உலகின் காத்திரமான பொருளாதார வளத்தைக் கொண்டிருக்கும் முதல் 5 நாடுகளுக்குள் பிரித்தானியா ஒன்றாகும். பிரித்தானிய ஏற்றுமதியில் சுமார் 60 சதவீதம் ஐரோப்பிய நாடுகளுக்கே செல்கிறது. ஏற்றுமதி அதிகரித்துள்ளதால் வேலை வாய்ப்பும் பெருகியது. உற்பத்தி அதிகரிக்க தொழிலாளர் தேவையும் அதிகரித்தது. அதற்கான காத்திரமான தொழிலாளர்கள் போதுமான அளவிற்கு பிரித்தானியாவில் இல்லை. எனவே பொருளாதார உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெரும் நிறுவனங்கள் உற்பத்திப் பொருட்கள், மூலப்பொருட்கள் தடையின்றி எல்லைகளைக் கடந்து செல்வது போலவே தொழிலாளர்களும் தடையின்றி செல்ல வேண்டும் என தமது அரசுகளை வற்புறுத்தின. இதன் பின்னணியில் இப் பெரும் சர்வதேச நிறுவனங்களுக்கு இன்னொரு கபட நோக்கமும் இருந்தது. அதாவது பிரித்தானியாவில் தொழிற் சங்கங்கள் பலமாக உள்ளன. இதனால் பல போராட்டங்களை நடத்தி தமது வருமானத்தை அதிகரித்துள்ளனர். அதாவது தொழிலதிபர்கள் நியாயமான சம்பளத்தை வழங்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதனால் தமது லாபத்தில் பெரும்பகுதியைத் தாம் இழப்பதாக இந் நிறுவனங்கள் முறையிட்டு வந்தன. எனவே ஐரோப்பிய ஒன்றிய எல்லைத் தடைகளை நீக்கினால் திறமை வாய்ந்த தொழிலாளர்களை மிகவும் மலிவான ஊதியத்தோடு பெற வாய்ப்பு ஏற்படும் என்பதாலும், பிரித்தானிய தொழிலாளர் சம்பள உயர்வு கேட்டால் மலிவான தொழிலாளர்களை பயன்படுத்த முடியும் என்பதாலும் எல்லைகளைத் திறந்தார்கள்.

ஐரோப்பிய ஒன்றிய பிரஜைகள் எல்லைகளைத் தடையின்றி தாண்ட முடியும் என்ற நிலை ஏற்பட்டதால் பெரும எவு தொழிலாளர்கள் ஐரோப்பிய நாடுகளிலிந்து பிரித்தானியா வந்தார்கள். சிறு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே பெருமளவு தொகையினர் வந்ததால் அதுவும் அவர்கள் குடும்பங்களாகவே வந்ததால் வீட்டு வாடகை திடீரென உயர்ந்தது. சிறிய வருமானம் உள்ளவர்கள் வாடகை வீடு பெற முடியாது அவதிப்பட்டார்கள். உள்ளூர் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு இடமில்லை. வைத்தியசாலைகளில், வைத்திய பராமரிப்பு நிலையங்களில் இடப்பற்றாக் குறை, போக்குவரத்து நெரிசல், குற்றச் செயல்கள் அதிகரிப்பு என பல பிரச்சனைகள் குறுகிய காலத்தில் ஏற்பட இதனால் பாதிக்கப்பட்டவர்கள் காலா காலமாக அப் பிரதேசங்களில் அமைதியாக வாழ்ந்த மக்களே. இவ்வாறு திடீரென ஏற்பட்ட குடிப் பெருக்கத்தால் குழப்பமடைந்தார்கள். அரசியல்வாதிகளைத் திட்டத் தொடங்கினார்கள். மலிவான சம்பளத்தில் போதுமான தொழிலாளர்கள் இருந்ததால் கம்பனிகள் ஆட்குறைப்பு செய்யத் தொடங்கின. ஒப்பந்த அடிப்படையில் வேலை வழங்குவதை நிறுத்திக் கொண்டன. ஒப்பந்தம் இல்லாமல் தாம் எண்ணியவேளை அழைக்கவும் துரத்தவும் வாய்ப்பு ஏற்பட்டது. உள்ளூர் மக்கள் வேலை இழந்தார்கள். கிடைத்த வேலை நிரந்தரமற்றதாக இருந்தது. தமது வருமானத்தில் பாரிய வீழ்ச்சியை எதிர்நோக்கினார்கள். குடும்ப வருமானம் சுருங்கியது. பாரிய நிறுவனங்கள் லாபத்தில் குறியாக இருந்ததால் உள்ளூரில் குறைந்த கூலிக்கு ஆட்களை அமர்த்தினார்கள்: இல்லையேல் குறைந்த கூலி உள்ள இந்தியா, சீனா, இலங்கை போன்ற நாடுகளுக்கு தமது தொழிற்சாலைகளை மாற்றினார்கள்.

இவ்வாறான ஓர் நிலமையே தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்திருப்பதா? இல்லையா? என்ற முடிவுக்கு பிரித்தானியாவைத் தள்ளியிருக்கிறது.

இப் பின்னணியில் தற்போது முன்வைக்கப்படும் வாதங்கள் குறித்து நாம் கவனம் செலுத்துவது அவசியம். நாம் ஏற்கெனவே குறிப்பிட்டது போல ஒரே கட்சிக்குள் ஐரோப்பிய ஒன்றியம் குறித்த பலமான கருத்து வித்தியாசம் காணப்படுகின்ற போதிலும் அக் கட்சி எவ்வாறு ஐக்கியமாக இயங்குகிறது? பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரோன் அவர்கள் ஐரோப்பாவோடு இணைந்து இருக்க வேண்டும் என்ற முகாமிற்குள் உள்ளார். அவரது அமைச்சர்கள் சிலர் வெளியேறவேண்டும் என பிரதமரை கடுமையாக விமர்ச்சித்துப் பேசுகிறார்கள். வாக்கெடுப்பு முடிவுகள் பிரதமருக்கு எதிராக அமைந்தால் அவர் பிரதமராக தொடர்ந்து இருக்க முடியுமா? ஆம் என்றே கூறுகிறார்கள். அதுவே முதிர்ச்சி பெற்ற ஜனநாயகம் என்கிறார்கள். அரசியல் ஆர்வம் கொண்ட பல்கலைக் கழக மாணவர்கள் அல்லது முதலாளித்துவ, ஏகாதிபத்திய நாடுகளில் இவ்வாறான பிரச்சனைகளில் விவாதங்கள் எவ்வாறு நகர்த்தப்படுகின்றன என அவதானிப்பது அவசியம்.

தமிழர்களில் ஒரு தரப்பினர் பிரிந்து செல்வதை வற்புறுத்துகிறார்கள். பிரிவினைக்கான காரணங்களில் பிரிவினைக்குப் பின்னர் எதிர்கால வாழ்வு எவ்வாறு அமையும்? என்பது குறித்து சிறிய விவாதமாவது நடத்தினார்களா? அல்லது நடத்த அனுமதிப்பார்களா? பிரிவினை ஏற்பட்டால் அவர்கள் வாழ்வில் பல சிக்கலான நிலமைகளினூடாகவே பயணிக்க வேண்டிவரும். எனவே பலமான அறிவூட்டல் மக்கள் மத்தியிலே நடந்தாக வேண்டும். இது நடைபெறுகிறதா? அரசியல் அமைப்பு மாற்றம் நிகழவுள்ளது. இது நாட்டின் அடிப்படைச் சட்டங்களை வரையறுக்கும் ஓர் பிரதான ஆவணமாகும். இவ் வரைபு குறித்து எமது மக்களுக்கு பொறுப்பு வாய்ந்த எந்த அரசியல் கட்சியாவது விளக்கம் தருகிறதா?

இனி பிரிந்தால் ஏற்படக்கூடிய நஷ்டங்கள் குறித்து வெளிவரும் தகவல்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

- பிரித்தானிய பொருளாதாரத்தில் வருடா வருடம் சுமார் 91 பில்லியன் ஸ்ரேர்லிங் பவுண்கள் இணைந்திருப்பதால் கிடைக்கிறது.
- உலக நாடுகளின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான பலமான தலைமையை கூட்டாக இருப்பதால் வழங்க முடிகிறது.
- ஐரோப்பிய பொருளாதாரத்தில் பிரித்தானியா அதிக முதலீடு செய்வதால் பெரும் வருமானத்தைப் பெறுகிறது.
- 30 லட்சம் தொழில்கள் ஐரோப்பிய வர்த்தகத்தில் தங்கியுள்ளன.
- ஐரோப்பிய உற்பத்திகளில் போட்டியிருப்பதால் பொருட்களின் விலை குறைகிறது. அது நுகர்வோருக்கு வாய்ப்பானது.
- விமானக் கட்டணம் குறைகிறது.
- சுமார் 200,000 லட்சம் பிரித்தானிய வர்த்தக நிறுவனங்கள் ஐரோப்பாவுடன் வர்த்தகம் செய்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் குறித்த தகவல்களைப் பார்த்தோம். மறு பக்க விவாதங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

- கடந்த ஒரு வருடத்தில் மாத்திரம் சுமார் 3 லட்சம் மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வந்துள்ளார்கள்.
- இந் நிலை தொடருமானால் 10 வருடங்களில் அத் தொகை 20 லட்சத்திற்கு அதிகமாகி விடும்.
- ஐரோப்பிய ஒன்றியத்தில் ருமேனியா, பல்கேரியா, குரேஷியா, துருக்கி போன்ற நாடுகளும் இணையவுள்ளன. அவர்களும் ஐரோப்பா முழுவதிலும் கட்டுப்பாடின்றி சென்று வரலாம்.
- ஐரோப்பிய வரவு செலவுத் திட்டத்திற்கு பிரித்தானியா ஒரு கிழமைக்கு 350 மில்லியன் பவுண்களை வழங்குகிறது. இது ஒவ்வொரு வாரமும் புதிய வைத்தியசாலையைக் கட்டவும் அல்லது 600,000 தாதிகளுக்கு வேலை வழங்க முடியும். ஐரோப்பிய ஒன்றியத்திற்கு பிரித்தானியா வழங்கும் பணம் எவ்வாறு செலவிடப்பட வேண்டும்? என்பது குறித்து எதுவுமே கேட்க முடியாது.

எனவே ஐரோப்பிய ஒன்றியத்தோடு இணைந்து இயங்காமலே காத்திரமான பொருளாதாரத்தை வளர்க்க முடியும் என்பது வெளியேற வேண்டும் என்போரது வாதமாகும். பிரித்தானிய அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான திருப்புமுனையாக இவ் வாக்கெடுப்பு இருக்கப் போகிறது. பிரித்தானிவில் வாழும் சாதாரண தமிழ் மக்கள் கூட மிகவும் கரிசனையோடு கவனிக்கும் வாக்கெடுப்பாக உள்ளது. அரசியல் ஆர்வம் கொண்டவர்களுக்கு குறிப்பாக இலங்கை அரசியலில் காத்திரமான பங்களிப்பவர்கள் பிரித்தானிய முதலாளித்துவ ஜனநாயகத்தின் இன்னொரு முகத்தைப் பார்க்க இது நல்ல தருணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுமிராண்டிப் பண்பாடே சாதியமைப்பு அதற்குச் சாவு மணி அடிப்பதே பகுத்தறிவு

சிங்கள மேலாதிக்கத்துக்கு எதிராகப் போராடுவதற்கு தமிழர்களின் ஒற்றுமையைக் கோரும் தமிழ் மேட்டுக் குடியினர் தமிழர்கள் மத்தியில் சாதிகளை வைத்து பிளவுகளைப் பேணுவதில் உறுதியாகவே உள்ளனர்.

சமூகத்தை சாதி அடிப்படையில் பிரித்து உயர்ந்தவர்கள் - தாழ்ந்தவர்கள் என்றும், தீண்டத்தக்கவர்கள் - தீண்டத் தகாதவர்கள் என்றும், வீட்டுக்குள் அண்டப் படக் கூடியவர்கள் - வீட்டுக்குள் அண்டப் படக்கூடாதவர்கள் என்றும் காணப்படு கின்ற, பார்க்கப்படுகின்ற அநாகரீகம் இந்திய - இலங்கை சமூக அமைப்புக் களிலே தான் காணப்படுகின்ளது. வாழ்வு நிலையால் ஒருவன் வறியவனாக, உழைப்பை விற்று உயிர்வாழும் தொழி லாளி யாக, ஏழை விவசாயியாக வாழ்வது வேறு. ஆனால், இங்கு பிறப்பாலேயே மனிதர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் தீண்டத் தகாதவர்கள் என்றும் இருக்கின்ற காட்டுமிராண்டித்தனம் எமது பிராந்திய சமூக அமைப்புகளிலேதான் நிலவுகிறது. இதை நியாயப்படுத்த முற்படுபவர்கள் இது தொழில் ரீதியாக சமூகத்தை ஒழுங்கு முறைப்படுத்தி நிர்வகிப்பதற்காக இந்திய - இலங்கை நிலவுடைமை அமைப்பில் உருவாக்கப்பட்ட உழைப்புப் பிரிவினையே. ஆனால், இது காலப்போக்கில் மனிதர் களைப் பிறப்பால் பிரித்து வைப்பதாக ஆகி விட்டது என்கின்றனர்.

சாதியமைப்பின் மூலம், இந்து மதமே

இமயமலையின் மேற்குப் பகுதி கணவாய்களினூடாக இந்தியாவுக்குள் புகுந்து ஆதிக்கம் செலுத்திய ஆரியர்கள் தமது வேதங்கள் மற்றும் இதிகாசங்களி னூடாக தமது இனக்குழு மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு வகையாக மேற் கொண்ட பல்வேறு உருவாக்கங்களுள் இந்தச் சாதி அமைப்பு முறை பிரதான மானதொன்றாகும். சங்ககால தமிழ் சமு தாயத்தில் இந்த சாதி அமைப்பு முறை இருக்கவில்லை என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ப்பட்ட உண்மை. நாயன்மார் களாலும் சங்கராச்சாரியார் போன்றவர்க ளாலும் இந்துமதம் தமிழகத்துக்கு உரிய விதமாக அதனது வேசங்களை மாற்றி தமிழகத்தில் காலூன்றியதோடுதான் தமிழர்கள் சமுதாயத்தில் சாதி முறையும் வேரூன்றியது. தமிழர்களின் பொற்காலம் என்று பெருமிதப்படுத்தப்படும் சோழராட் சிக் காலத்திற்தான் தமிழகத்தில் கோவில் களை மையமாகக் கொண்டு உருவாக்கப் பட்ட அரச நிர்வாக கட்டமைப்பில் பார்ப் பனீயம் தமிழர் சமுதாயம் முழுமையிலும் நிறுவனமயமாக்கப்பட்டது. தமிழர் சமுதா யத்தின் மிகப் பெரும்பான்மையான மக்கட் பிரிவினர்களை அடிமைகள் குடிமை களாக்கி அவர்களின் தலைமீது ஒரு சிறு சதவீதத்தவர்களான பார்ப்பனர்கள் ஆதிக் கம் செலுத்தும் வகையாக தமிழர் சமூக அமைப்பில் சாதிக்கட்டமைப்பை நிரந்தர மாக்கியவாகள் புலிக்கொடியேந்திய சோழ மகாராஜாக்களே.

சாதி அமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற விரிவான விடயத்துக் குள் சென்று ஆராய்ச்சி செய்வதல்ல எமது நோக்கம். அது ஒரு புறமிருக்கட்டும். தந்தை ஈ.வெ.ரா பெரியார் இந்து மதத்தை வெறுத்தார். இந்து மதக் கடவுளர்களை அவமதித்தார். அதற்குக் காரணம், இந்து மதப் போதனைகளில் எந்த நல்ல விட யமும் இல்லை என்று கூறுவதற்காக அல்ல. மக்கள் கடவுள் நம்பிக்கை கொண்டிருந் ததற்காக மக்களை இழிவு படுத்தும் நோக் கம் கொண்டல்ல. மாறாக, மானுட சுயமரி யாதைகளையே இழிவுபடுத்தும் இந்த காட்டுமிராண்டித்தனமான சாதி அமைப்பு இந்து மதத்தின் தத்துவங்களினூடாகவும் இந்து மதக் கடவுளர்களின் பெயராலும் கட்டிக் காக்கப்படுவதாலேயே அவர் கடு மையாக நடந்து கொள்ள வேண்டியேற் பட்டது.

எமது சமுதாயத்தில் சாதி அமை ப்பு முறை இருப்பது ஒரு சாதாரண பகுத் தறிவு உள்ளவனாலும் ஏற்கப்பட முடியா தது. தமிழ்ச் சமூதாயத்தின் கணிசமான ஒரு பகுதியனரை இழிவு படுத்தும் - அவ மானப்படுத்தும் ஒன்றை பராமரிப்பது ஆபத்தானதாகும். நியாயமான அறிவுள்ள எவனும் இந்த சாதி அமைப்பைக் குறித்து பெருமை கொள்ள முடியாது. மாறாக வெட்கித் தலை குனியவே வேண்டும்.

இந்திய - இலங்கை சமூக அமைப் புக்களில் சாதி அமைப்பு இந்து மதத் திலேயே தோற்றம் பெற்றதாயினும் காலப் போக்கில் அது இங்கு எல்லா மதங்களைப் பின்பற்றுவோர் மத்தியிலும் வேரூன்றிவிட் டது. இலங்கையில் பௌத்தர்கள் மத்தி யில் பரவலாகவே உள்ளது, கிறிஸ்த்த வர்கள் மத்தியில் பலமாகவே உள்ளது. ஏன் சில பகுதிகளில் இஸ்லாமியர்களின் மத்தியில் கூட உள்ளது. எனவே, சாதி என்பது இந்திய - இலங்கை சமூகங்களில் மத நம்பிக்கைகள், மொழிப்பாவனைகள் போன்றவற்றையும் கடந்து ஒரு சமூக நோயாகப் பரவியுள்ளது.

சாதிக் கொடூரங்கள் மிதமாகி இருப்பினும் தந்திரமாகப் பேணப்படும் சாதியமைப்பு

இலங்கையில் 1950 - 1960களில் இருந்த அளவுக்கு சாதிக் கொடூரங்கள், ஏற்றத் தாழ்வுகள், இழிவுபடுத்தல்கள் இப் போது இல்லையே என வாதிடலாம். அதற்கு தமிழர்கள் மத்தியில் ஏற்பட்ட முற்போக்கு சிந்தனைகள் அல்லது பகுத் தறிவின் வளச்சியல்ல காரணம் மாறாக அதற்கான கடுமையான பல போராட் டங்களும் பொருளாதார ரீதியாக ஏற்பட்ட மாற்றங்களுமே காரணங்கள் ஆகும். சமூக ரீதியாக சாதியடிப்படையில் தாழ்த் தப்பட்ட நிலையிலிருந்தாலும் இன்று தாழ் த்தப்பட்ட மக்கள் உயர்ந்த சாதிக்காரர் களில் தமது அடிப்படை வாழ்வுக்காகத் தங்கியிருந்த நிலையிலிருந்து பெரும் மாற்றங்கள் - முன்னேற்றங்கள் ஏற்பட்டு விட்டன.

தாங்கள் சாதிரீதியாக சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்களாக கணிக்கப்படுவது தெரிந்திருக்கிற போதிலும் தமது சாதிப் பெயரைச் சொல்லவோ அல்லது தாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என அடையாளப் படுத்தப்படுவதை ஏற்றுக் கொள்ளவோ இன்றைய இளம் தலைமுறையிற் பெரும் பான்மையோர் விரும்பவில்லை. அது அவர்களிடையே சாதியமைப்பு தொடர்பாக நிலவும் அச்சத்திலிருந்து எழவில்லை மாறாக, அவர்களின் சமூகத் துணிச்சல், தனித்துவ ஆழுமை, சுயமரியாதை உணர்வு போன்றன சம்பந்தப்பட்ட விடயமாக ஆகி யுள்ளது. இன்றைய தலைமுறையினர் சமூகத்தால் தம்மை அடையாளப்படுத்தும் சாதிப் பெயர்கள் மூலம் தம்மைத் தாமே தாழ்ந்த சாதி என்று யாரும் பார்ப்பதில்லை என்று கூறுபவர்கள் எங்கெங்கெல்லாம் சாதியமைப்பு எப்படி மர்மமாக - தந்திரமாக வேலை செய்கின்றது எப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழர்களுக்குள் சாதிப் பிளவுகள் உள்ளவரை தமிழின ஒற்றுமை போலியானதாகும்

காதல் தெய்வீகமானது என்பார் கள். ஆனால் இரண்டு வெவ்வேறு சாதிக் காரர்களுக்கு இடையில் காதல் என்று வந்து விட்டால் அது ஏதோ மானுட நாகரீ கத்துக்கே ஏற்புடையது அல்ல என்பது போல கொலைவெறி கொண்டு எதிர்க் கிறார்கள்.

சிங்கள மேலாதிக்கத்துக்கு எதிரா கப் போராடுவதற்கு தமிழர்களின் ஒற்று மையைக் கோரும் தமிழ் மேட்டுக் குடியி னர் தமிழர்கள் மத்தியில் சாதிகளை வைத்து பிளவுகளைப் பேணுவதில் உறு தியாகவே உள்ளனர்.

நாம் எல்லோரும் தமிழர்கள், தமிழர்களாகிய நாம் எல்லோரும் ஓர் இனம், தமிழர்களகிய நாம் எல்லோரும் வரலாற்றாலும் மொழியாலும், கலாசாரத் தாலும் ஒரே குடிப் பிறந்தோர். எனவே, தமிழர்கள் எல்லோரும் தமிழச்சாதி என்னும் ஒரே சாதியைச் சேர்நதவர்கள் - இங்கு சாதியால் மேலோர் - கீழோர் என்றில்லை எல்லோரும் சமமே என எண்ணுவதற்கோ அல்லது ஏற்றுக் கொள் வதற்கோ இங்குள்ள மேட்டுக் குடியினர் இன்னமும் தயாராக இல்லை.

சாதி என்பது கடவுளால் உரு வாக்கப்பட்டது என நிலை நிறுத்த முயலு கின்றனர். சிங்களவர்களிடம் சமத்துவத் தைக் கோரும் இவர்கள் தமது இனத்தைச் சேர்ந்த அனைவரும் சமமானவர்கள் என உணர்வுபூர்வமாக ஏற்பதற்கு மறுக்கி றார்கள்.

சண்டைக் காலத்தில் காயம்பட் டவர்களுக்கு ரத்தம் ஏற்றுகையில் அந்த ரத்தம் எந்த சாதிக்காரருடையது என்று பார்த்தா ஏற்றப்பட்டது! சண்டைக் காலத் தில் இடம்பெயர்ந்த போதெல்லாம் சாதி பார்க்காமல் மற்றவர்களின் உதவிகளெல் லாம் ஏற்கப்பட்டன. சண்டைக் காலத்தில் சாப்பாட்டுக்கு கஷ்டங்கள் ஏற்பட்ட போது யார் சாப்பாடு தந்தாலும் சாப்பிட்டு உயிர் வாழ்ந்தால் போதும் என்று சண்டைக் காலத்தில் துன்பங்கள் நேர்ந்த பொழுது பார்க்கப்படாத சாதி ஏன் சண்டை முடிந்த பின்னர் மீண்டும் தலை தூக்கி நிற்கிறது.

சாதிக் கொடூரங்கள், சாதிரீதியான அடக்குமுறைகள், சாதியடிப்படையில் பகிரங்கமாக அவமானப்படுத்துதல்கள் போன்றன இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் வெளிப்படையாக இல்லா விடினும், சாதியடிப்படையிலான புறக் கணிப்புகளும் பாரபட்சங்களும், நாகூக் கான முறைகளில் தீண்டத்தகாதவர்க ளாக நடாத்தப்படுதலும் இன்னமும் தொட ருகின்றன என்பதை மறுக்க முடியாது, சனசமூக நிலையங்கள் மற்றும் விளை யாட்டுக்கழகங்கள் இன்னமும் சாதியடிப் படையிலானவைகளாகவே பெரும்பாலும் உள்ளன.

சாதியமைப்பு தமிழினத்துக்கு அவமானம்

அரசியல் பொருளாதார வளர்ச்சிய டைந்த நாடுகளுக்கு பல லட்சம் தமிழர்கள் குடி பெயர்ந்து போயிருக்கிறார்கள். அவர் கள் வாழும் நாடுகளில் உள்ள சமூகங்க ளில் சாதி அமைப்புகள் இல்லை. பிறப் பால் ஒரு மனிதனை இழிநிலையான வனாகக் கருதும் கலாசாரம் அந்த நாடுக ளுக்குத் தெரியாது. ஆனாலும் நமது தமிழர்கள் இந்த நாடுகளிலெல்லாம் அந்த நாடுகளின் சமூகப் பண்பாடுகள் கலாசா ரங்களையெல்லாம் அறிந்திருந்தும் இன் னமும் மேல்சாதி - கீழ்சாதி என சாதி முறையைக் கட்டிப்பிடித்து வைத்திருக்கும் தமிழன் எப்பொழுது இந்தக் காட்டுமிராண் டித் தனத்திலிருந்து வெளிவரப் போகிறான் என்று தெரியாமலிருக்கிறது.

"சாதிகளில்லையடி பாப்பா" என்று பாடிய பாரதி சாதிகள் இல்லாமற் போன ஒரு தமிழ்ச் சமுதாயத்தைக் கனவு கண்டான். ஆனால், இன்று நாம் "சாதி களை இல்லாமற் செய்வோமடி பாப்பா" என்று பாட வேண்டியுள்ளது. சாதிகளில் லாத தமிழ்ச் சமுதாயத்தை நாம் நிஜமாக்க வேண்டும். "சாதி வெறியர்கள் காட்டு மிராண்டிகள்", "உறவுகளிலும் ஒன்று கூடல்களிலும் சாதி பார்ப்பவர்கள் சமூக புறம்போக்குகள்", "தமிழ்ச் சமுதாயத்தில் சாதியமைப்பைக் கட்டிக் காக்க முற் படுபவர்கள் தமிழின விரோதிகள்" என தமிழ்ச் சமுதாயத்தில் மிகப் பெரும்பான் மையானோர் சாதியமைப்புக்கு எதிராக ஆக்ரோஷம் கொண்டெழாத வரை மேட் டுக்குடித் தமிழ்ச்சாதி, தாழ்த்தப்பட்ட தமிழ்ச்சாதி என பிளவுபட்ட இனமாகவே தான் தமிழினம் வாழும். இங்கு தமிழின ஒற்றுமை என்பது உதட்டளவான - குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட ஒன்றாக மட்டுமே தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த. ரவிச்சந்திரன் திருகோணமலை

கேள்வி : இலங்கையில் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் சம்பந்தமாக தற்போது முனனெடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றிய உங்கள் கருத்துக்கள் என்ன?

பதில் : ஒரு புதிய அரசியல் யாப்பிற்கான தற்போதைய முன்னெடுப்புகள், தமிழர்களது அரசியல் கோரிக்கைகளையும், எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்வதற்காக மட்டுமே என்று நாம் கருதக்கூடாது. இதுவும், அதனால் இன முரண்பாடுகளைக் களைவதும் ஒரு நோக்கமாகக் கொள்ளப்படுகிறதுதான் எனினும், அது மாத்திரம் நோக்கமல்ல. 1978ம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசால் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பினுள்ள - மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்றத்தை இரண்டாம் பட்சமாக்கும் - ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதீத நிறைவேற்று அதிகாரங்களைக் கட்டுப்படுத்துதல், நாட்டின் ஜனநாயகம், மனித உரிமைகள், நீதி பரிபாலனம், அதிகார துஷ்பிரயோகங்கள் ஆகியவை சம்பந்தமான அடிப்படைகளை உறுதி செய்வதற்கான கட்டமைப்புகளை நிறுவுதல், மக்கள் தம்மைப் பரவலாகப் பிரதிநிதித்துவம் பெறக்கூடிய வகையில் தேர்தல் முறைமைகளைச் சீரமைத்தல் ஆகியனவும் உள்ளடங்கும்.

அத்துடன், புதிய அரசியல் யாப்பு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மையுடன் அங்கீகரிக்கப்படுவதோடு, சர்வஜன வாக்கெடுப்பின் மூலமும் நாட்டின் பெரும்பான்மை மக்களால் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

எனவே, இன்றைய யதார்த்தத்தில், பெரும்பான்மையான மக்கள் பிரதிநிதிகளும், நாட்டு மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இனப்பிரச்சனைக்கான நியாயமான அரசியல் தீர்வொன்று யாப்பில் உள்ளடக்கப்படுவதை, தமிழர்கள் மற்றைய சிறுபான்மை இனங்களான முஸ்லிம், மலையகத் தமிழர்கள் ஆகியோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் உறுதி செய்து கொள்வது அவசியம். இவர்கள் 'இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு' என்ற வட்டத்திற்குள் மட்டும் தம்மைச் சுருக்கிக் கொள்ளாமல், அரசியல் யாப்பில் உள்ளடக்க முன்னெடுக்கப்படும் மற்றைய விடயங்களிலும் தமது ஆக்கபூர்வமான பங்களிப்புகளை வழங்க வேண்டும். அத்துடன், அவற்றின்பால் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் மிகவும் அவசியமாகும். நாட்டின் ஜனநாயகம், மனித உரிமைகள், நீதி பரிபாலனம், அதிகார துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான கட்டமைப்புகள் நிறுவப்பட்டு வலுப்படுத்துதல் மூலந்தான் இனப் பிரச்னைக்கான எந்தத் தீர்வையும் காத்திரமாக அமுல்படுத்த முடியும்.

புதிய அரசியல் யாப்பானது, தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கே என்று அதனை மையப்படுத்திச் செயல்படுவது, தவறானது மட்டுமல்ல, அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்குப் பிணந்தின்னிக் கழுகுகள்போல் காத்திருக்கும், இனவாதத்தை முன்வைத்து, "ஐயோ! இது நாட்டின் ஒருமைக்குப் பங்கம்" என்று கூக்குரலிடும் சிங்களப் பேரினவாதிகளுக்கு வலு சேர்ப்பதாகவும் அமையும்.

உண்மையில், அதிகாரப் பரவலாக்கம் என்பது தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களுக்கு மட்டுமானதல்ல. -இது நாட்டின் அனைத்து மாகாணங்களுக்குமாகும். அதிகாரப் பரவலாக்கம் மூலந்தான் வெவ்வேறு வகையில் அனைத்து அடித்தள மக்களும் பங்குபெற வழி சமைத்து, அவர்களின் ஈடுபாட்டை அதிகரித்து, நாடு முன்னேற்றம் காணமுடியும். அது இலங்கையின் முழுப்பகுதிகளுக்குமே நன்மை பயக்கும் என்ற உண்மையைத் தமிழ்த் தலைமைகளும், அரசியல்வாதிகளும், கல்விமான்களும், சமூக நலன் விரும்பிகளும் சிங்களமக்கள் மத்தியிலும் சந்திப்புகள், ஊடகங்கள் மூலம் கொண்டு செல்ல வேண்டும்.

மேலும், தமிழர்களின் பிரச்னைக்கான தீர்வாக எதனை அளித்தாலும், அரசியல் பதவிக்காக எதிர்த்தே நிற்பது என்று செயற்பட்ட யு.என்.பி.யும், எஸ்.எல்.எவ்.பி.யும் முன்னென்றுமே இல்லாத வகையில் இப்பொழுது ஒன்றாக ஆட்சியில் இருக்கின்றன. இது ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பமாகும். -இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ்த்தலைமைகள் தமிழர்களின் நலனில் உண்மையான, மானசிகமான அக்கறை கொண்டவர்கள் என்றால், தவறவிடாது கவனமாகக் கையாண்டு யாதார்த்தங்களை கருத்தில் கொண்டு நாட்டின் பெரும்பான்மையினரால் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றில் இணக்கம் காணவேண்டியது வரலாற்றுக் கடமையாகும்.

ஆனால், மிகவும் தூரதிருஷ்டவசமாக, மறுபடியும், மறுபடியும், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மை அரசியல்வாதிகளோ, தமிழ்மக்கள் மத்தியில் இயங்கும் சிவில் சமூகத்தினரோ, இந்த உண்மைகளைக் கருத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. 'சுயநிர்ணய உரிமை', 'சமஷ்டி', 'தமிழர்களின் தாயகம்' ஆகிய சொற்பதங்களின் உபயோகங்களாலேயே மக்களை உசுப்பேத்திக் கொண்டு காலத்தைக் கழிக்கிறார்கள். இந்த உபயோகங்கள், செயற்பாடுகள், உணர்ச்சி அரசியலுக்கும், சிங்களப் பேரினவாதிகளுக்கும், உறுதுணையாக அமையலாம் ஆனால், தமிழ்மக்களுக்கு எதுவித சுபீட்சத்தையோ, இன்னல்கள் தீர்ந்த வாழ்வையோ அளிக்கப்போவதில்லை. அவர்களை மேலும் இழிவு நிலைக்கு இட்டுச் செல்லவே வழி வகுக்கும் என்பது திண்ணம்.

அரசியல் தீர்வு, இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம், மற்றும் நாட்டின் அனைத்து மக்களின் பொருளாதார, சமூக வளர்ச்சி, மேம்பாடு என்ற வகையில், தற்போதைய அரசியல், சமூக நிலைமைகளில், அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய வையாக கீழ்காண்பவைகளில் இப்பொழுது கவனம் செலுத்துவதே யாதார்த்தமானது, சாத்தியமானது, நன்மையானது அறிவுடமையானது என்பது எனது கருத்து:

- மத்திய அரசு மற்றும் மாகாண/பிராந்திய அரசாங்கங்கள் ஆகியவற்றின் அதிகபட்ச அதிகாரப் பரவலாக்கத்திற்கான விடயங்களை உள்ளடக்கிய, முரணற்ற, தெளிவான பட்டியல்கள்

- மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ் வரும் விடயங்கள், மாகாண/பிராந்திய அரசாங்கத்தின் அதிகாரத்தின் கீழ் வரும் விடயங்கள் என முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சராகப் பணியாற்றிய திரு. வரதாராஜப்பெருமாள் அவர்களால் தயாரிக்கப்பட்ட இரு பட்டியல்களும் கருத்தில் கொள்ளத் தக்கவை.

- அவற்றை மத்திய அரசு நீர்த்துப்போகச் செய்யாத, வாபஸ் பெறமுடியாத, நாசப்படுத்த வழியில்லாத, மாகாண அரசால் துஷ்பிரயோம் செய்ய முடியாத, பாதுகாப்புகள் மற்றும் அரசியல் ஜனநாயக, நீதிக் கட்டமைப்புகள்;

- இனங்களுக்கிடையேயான முரண்பாடுகள், சந்தேகங்கள், குரோதங்கள் ஆகிய நீங்கப்பெற்ற சமாதானச் சூழல் கொண்ட ஒரு காலகட்டத்தில், ஒன்பது மாகாணங்களில், எந்த இரண்டு மாகாணங்களும் இணைய விரும்பின், அவ்விருப்பு ஒரு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் சம்பந்தப்பட்ட இரு மாகாணங்களில் வாழும் பெரும்பான்மை மக்களால் தெரிவிக்கப்படும் பட்சத்தில், அந்த மாகாணங்கள் இணைந்து செயல்படும் உரிமை;

- ஒரு மாகாணத்தில் வாழும் பெரும்பான்மை இனமக்கள் அனுபவிக்கும் உரிமைகளையும், சலுகைகளையும், அந்த மாகாணத்தில் வாழும் சிறுபான்மையினரும் அனுபவிப் பதற்கான உரித்து;

- மத்திய அரசாங்க நிர்வாகங்களிலும், அமைப்புகளிலும், சிறுபான்மை இனத்தவருக்கு திறமை அடிப்படையிலான, பாகுபாடற்ற தேர்வுகள், வகிபாகங்கள்.

மேற்குறிப்பிட்டவைகளை அரசியல் யாப்பில் சரிவர உள்ளக்கப்பட்டிருப்பதை உறுதி செய்து கொண்டாலே, இலங்கை மண்ணில் வாழ்கின்ற, தாழ்ந்தும், அழிந்தும் கொண்டேபோய்க் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் சரிவை தடுத்துச் சரி செய்யலாம்.

ஆனால், இது பற்றிய புரிதல்கள் தமிழ் மக்களிடம் கொண்டு செல்லப்படுவதாகத் தெரியவில்லை. அவற்றை அடையும் மார்க்கங்களை பெரும்பான்மையான தமிழ்த் தலைமைகள் மேற்கொள்ளாமை, அவற்றை அவர்கள் மேற்கொள்ள வேண்டிய அழுத்தங்கள் மக்களால் அளிக்கப்படாமை, எமக்குப் பேரிழப்புகளையே விளைவுக்கும்.

"இந்தப் புதிய அரசியல் யாப்பு சம்பந்தமாக உங்கள் நிலைப்பாடு என்ன?" என்று சில ரி.என்.ஏ தலைவர்களிடம் கேட்கப்பட்டபோது கிடைத்த பதில்கள்:

ஒருவர்-

"சமஷ்டியை, வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வை, சுயநிர்ணய உரிமையை நாம் விட்டுக் கொடுக்கப்போவதில்லை"

"சரி! எப்படி அவற்றை, எந்த விதமாக முன்னெடுக்கப் முன்னெடுக்கப் போகிறீர்கள்? " என்று கேட்டால் பதில் இல்லை.

இன்னமொருவர்-

"இந்த அரசாங்கத்திலும் எங்களுக்கு நம்பிக்கை இல்லை."

"அப்படியானால் எந்த அரசாங்கத்தில், எப்பொழுது உங்களுக்கு நம்பிக்கை வரப்போகிறது?" என்று கேட்டால் பதில் இல்லை

வேறொருவர்-

"பாரப்போம், என்ன தரப் போகிறார்கள் என்று –அதற்குப் பிறகு நாங்கள் எங்கள் நிலைப்பாடுகளையும், செயற்பாடுகளையும் தெரிவிப்போம்"

"விடயங்கள் முடிந்த பின்னர்தான் நிலைப்பாடும், செயற்பாடுமா?, அதனால் என்ன பயன்?" என்று கேட்டால் பதில் இல்லை.

தமிழ்த் தலைமைகள் என்ன செய்யும் என்று ஆருடம் கூறுவது ஒன்றும் கடினமில்லை!.

ஆக்கபூர்வமான பங்களிப்புகள் ஒன்றுமே செய்யாது, 'புதிய யாப்பில் உள்ளடக்கியவை போதாது', 'தமிழர்களின் தியாகங்கள், உயிர் இழப்புகளுக்குப் பின்னர் (இவர்கள் ஒரு தியாகமும் செய்யவில்லை, தமது உயிரை இழக்கவில்லை என்பது வேறு விடயம்!) - இவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது', 'நாம் தொடர்ந்து போராடுவோம்' என்று சன்னதம் ஆடுவார்கள், வாக்கு வேட்டை யாடுவார்கள்!.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 13வது திருத்தத்தின் அரசியல் பரவலாக்கத்தை ஒரு ஆரம்பப் படியாக ஏற்றுக் கொள்ளாது நிராகரித்து, கணக்கற்ற சேதங்களுக்கு வழிகோலினார்கள். பின்னர் அதே 13வது திருத்தின் அடிப்படையில் நடைபெற்ற கூறுபட்ட மாகாணசபைத் தேர்தலில் சாக்குப்போக்குகள் கூறி வென்றார்கள். அதுபோலவே, இப்போதைய சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தாமல் புதிய அரசியல் யாப்பையும் நிராகரிப்பார்கள். குறுகிய வெற்று உணர்ச்சிகளை முன்வைத்து மக்களை உசுப்பேற்றி அடுத்த தேர்தல்களிலும் தம்மைத் தக்க வைத்துக் கொள்வார்கள். மக்கள் பிரதிநிதிகளாக சிம்மாசனங்களை இறுகப் பிடித்துக் அவற்றில் குந்திக் கொள்வார்கள்!.

கடந்த பல தசாப்தங்களாகத் தொடரும் இனவாத அரசியல் இரு பக்கங்களாலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். இன முரண்பாடுகளை முன்வைத்து வெல்லும் அரசியல் தொடரப்படும்மக்கள் தொடர்ந்தும் ஏமாளிகளாவர் தமிழர்களின் வாழ்வு தொடர்ந்தும் மேலும் அழிவுப் பதையில் செல்லும்!

வ.யோகராசா சுண்ணாகம்

கேள்வி: வடமாகாண முதலமைச்சர் முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனி "எங்களுக்கு பொலிஸ் அதிகாரத்தைத் தாருங்கள். நாம் இங்கு நடக்கும் களவு, கொலைகள், கற்பழிப்புகளை நிறுத்திக் காட்டுகிறோம்" எனச் சமீபத்தில் கூறியிருப்பது பற்றி?

பதில்: ஐயா விக்னேஸ்வரன் அவர்களுக்கு வடமாகாண மக்கள் விடுக்க வேண்டிய ஒரு வேண்டுகோள்:

பொலிஸ் நிர்வாகம் உங்களுக்குக் கையளிக்கப்பட்டால் சமூகச் சீரழிவுகளை முடிவிற்குக் கொண்டு வருவீர்கள் எனப் பிரகடனம் செய்திருக்கிறீர்கள். கேட்கப் புல்லரிக்கிறது தான்! இலங்கை அரசாங்கத்திற்கு இப்படியெல்லாம் சவால் விடும் உங்களின் பல அறிக்கைகளைப் போலவே இதனையும் 'தன்மானத் தமிழர்கள்' அதுவும் குறிப்பாக 'யாழ்ப்பாணப் புத்திஜீவிகள்' மெய்மறந்து மெச்சக்கூடும்.

ஆனால், நாம் உங்களை வடமாகாணத்தின் முதலமைச்சராக மிகப் பெரும்பான்மையான விருப்பு வாக்குகளால் தெரிவு செய்து அனுப்பியதன் காரணம், உங்களின் தகமைகளால், தொடர்புகளால், வடமாகாண சபையைத் திறம்பட நிர்வகித்து, எங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவீர்கள் என்ற ஒரே காரணத்திற்குத்தான். எனவே, ஏற்கனவே அளிக்கப்பட்ட அதிகாரங்கள் மூலமாக நாங்கள் படும் இன்னல்கள் தீர, எங்களின் பொருளாதார, சமூக, வளர்ச்சிகளுக்காக என்ன செய்துள்ளீர்கள்? என்பதன் பட்டியல் ஒன்றைத் தயவுசெய்து வெளியிடவும். அதில் நீங்கள் அதிகாரத்தில் அமர்ந்தது முதல் இற்றைவரை வடக்கு மாகாண அரசிற்கென மத்திய அரசினால் எவ்வளவு பணம் வழங்கப்பட்டது?. அந்தப் பணத்தில் என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன?, எவ்வளவு பணம் செலவாகியது?, உங்களிடம் திட்ட வரையறைகள் இல்லாதபடியாலும், செலவு செய்வதற்கான நியதிச் சட்டங்களை வடமாகாணசபையில் நீங்கள் நிறைவேற்றாமையினாலும், எவ்வளவு பணம் திரும்ப மத்திய அரசிடம் அனுப்ப நேர்ந்தது?, வடமாகாணத் தமிழ் மக்களின் என்னென்ன பிரச்னைகள் (குடிநீர்ப் பிரச்னை உட்பட) தீர்க்கப்பட்டிருக்கின்றன? என்ற விபரங்களையும் தயவுசெய்து தர வேண்டுகிறோம்.

வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் என அனைத்துத் தமிழர்களின் பிரச்னைகளும் கோரிக்கைகளும் என்ற நிலைமை முன்னர் இருந்தது. முதலில் மலையகத் தமிழர்கள் பிரிக்கப்பட்டு, பின்னர் முஸ்லிம்கள், தொடர்ந்து கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் எனப் பிரிக்கப்பட்டனர். இப்பொழுது வடமாகாணத் தமிழர்களின் பிரச்னைகள், அதுவும் குறிப்பாக யாழ்ப்பாணத்துத் தமிழர்களின் பிரச்சினை, யாழ்ப்பாணத் தமிழர்களின் அதிகாரத்திற்கும், அகந்தைக்குமேயான போட்டி என்ற வட்டத்துக்குள் கெட்டித்தனமாகக் குறுக்கிவிடும் சிங்களப் பேரினவாத இயந்திரத்தின் திட்டத்திற்கு நீங்கள் நன்றாக உபயோகப்படுத்தப்பட்டு விட்டீர்கள் பயன்படுகிறீர்கள். அறிந்தோ அறியாமலோ துணை போகிறீர்கள்!.

முதலமைச்சர் பதவிக்கு எதற்காக வடமாகாண மக்களால் தெரிவுசெய்யப்பட்டீர்களோ, அதற்காகச் செயற்படாது, நீங்களும் எங்களை ஏமாற்றி விட்டீர்கள். தயவுசெய்து இனியாவது செயற்படுங்கள். முடியவில்லையாயின் விலகி, அரசியலிற்கு இழுத்து வரப்படுவதற்கு முன்னர் நீதியரசர் பதவியிலிருந்து ஓய்வுபெற்று நீங்கள் ஈடுபட்டிருந்த ஆன்மீக வாழ்க்கைக்குத் திரும்புங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை வேண்டியும்
ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்குமான போராட்டத்தில்
தம் உயிரை அர்ப்பணித்த, தோழர்கள், ஆதரவாளர்களை

நினைவு கூருவோம்

போராட்டத்தில் உயிர்நீத்த அனைவரதும் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் விட்டுச் சென்ற பணியை, நம்பிக்கைகளை
முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவோம்



தோழர் றொபேட்
தம்பிராசா சுபத்திரன்
சாவகச்சேரி



தோழர் ராஜன்
இராசரத்தினம் இரவீந்திரன்
கோப்பாய்



தோழர் காஸ்ரோ
மாணிக்கம் மனோகரராஜா
சாவகச்சேரி

கிருபாகரன்

ரவிலர்

பத்மநாதன்

யோகசங்கரி

அன்புமுகுந்தன்



தமிழகத்தின் தலை ,கர் சென்னையில் 1990 யூன் 19 அன்று படுகொலை செய்யப்பட்ட எமது செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா அவர்களுடன் மரணித்த தோழர்கள்



விஸ்வன்

கவிதா

ஜெசிந்தா

ரவி

தருமன்

கோமஸ்ராஜா

புவிநாதன்

பெயர்	தோழர்	இறப்பு	வசிப்பிடம்
கந்தசாமி பத்மநாபா	ரஞ்சன்	19.06.1990	காங்கேசன்துறை
க. யோகசங்கரி	சங்கரி	19.06.1990	யாழ்ப்பாணம்
த. சுபத்திரன்	றொபேட்	14.06.2003	சாவகச்சேரி
இ. ரவீந்திரன்	ராஜன்	07.06.1985	கோப்பாய்
மா. மனோகரராஜா	காஸ்ரோ	01.06.1987	சாவகச்சேரி
சி. கணேசதாஸ்	ரஞ்சன்	12.06.1986	சாவகச்சேரி
ஆ. மன்மதராஜா	ஆனந்த்	19.06.1989	தெல்லிப்பளை
	சுரேஸ்	26.06.1989	பலாலி
	சீலன்	04.06.1989	தொண்டமானாறு
	ரஞ்சன்	03.06.1985	மயிலிட்டி
	சந்திரன்	03.06.1985	மயிலிட்டி
	தயாளன்	03.06.1985	திருகோணமலை
ஜேம்ஸ் யூட்		05.06.1990	குருநகர்
பி. கிருபாகரன்	கிருபா	19.06.1990	காரைதீவு
ஜி. பத்மநாதன்	ரவி	19.06.1990	தம்பிலுவில்
ஜே. செல்வராசா	தர்மன்	19.06.1990	காரைதீவு
எஸ். புவனேஸ்வரி	ஜெசிந்தா	19.06.1990	காரைதீவு

பெயர்	தோழர்	இறப்பு	வசிப்பிடம்
	கவிதா	19.06.1990	சேனைக்குடியிருப்பு
கே. கோமளராசா	ஜயா	19.06.1990	மட்டக்களப்பு
எம். மிகிலார்	கமலன்	19.06.1990	மருதமுனை
எம். பாஸ்கரன்	பாண்டியன்	01.06.1985	ஏறாவூர்
எல். விமலதாசா	விமல்	12.06.1985	கிரான்
ஈ. ஜெயராஜா	ஜெயா	12.06.1985	கிரான்
கே. பரமேஸ்வரன்	கவி	18.06.1986	தாளங்குடா
எஸ். கிருஸ்ணமூர்த்தி	கிட்டு	12.06.1986	செங்கலடி
ரீ. ராஜரட்ணம்	நித்தி	15.06.1986	ஏறாவூர்
ரீ. தேவராஜா	ராஜா	02.06.1987	புதுக்குடியிருப்பு
ஜே. தெய்வநாயகம்	தீரன்	22.06.1989	காயன்கேணி
திரவியநாதன்	லிங்கன்	19.06.1990	தம்பலகாமம்
எஸ்.முகுந்தன்	அன்புமுகுந்தன்	19.06.1990	திருகோணமலை
	ஜெகன்	16.06.1990	நிலாவெளி
கணேசலிங்கம்	வரதன்	11.06.1986	வவுனியா
	ராமு	11.06.1986	செட்டிகுளம்
	கோபி	11.06.1986	பம்பைமடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்கள் புயல்போல் வீசும் ஆனால், உண்மை மெதுவாய் பேசும்



1991 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் உறுப்பினராக சேர்ந்த தமிழினி (சிவகாமி) பின்னர் புலிகள் இயக்கத்தின் மகளிர் அணியின் அரசியல்துறை பொறுப்பாளர் பதவியை வகித்தவர். புலிகளின் கேணல் தரத்தை சேர்ந்த தமிழினி 2009 இறுதி யுத்தத்தின் போது அரச படைகளிடம் சரணடைந்து சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார். இதன் பின்னர் திருமணம் செய்துகொண்டு தனது பிறந்த இடமான பரந்தனில் வசித்துவந்த தமிழினி நோய் காரணமாக 2015 அக்டோபர் 18 அன்று தனது 43 வது வயதில் உயிரிழந்தார். பல்வேறு நெருக்கடிகளுக்கும் முகங்கொடுத்தே தனது கடைசி காலத்தை களித்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழினியின் அனுபவங்கள் கடந்த காலம் குறித்த அவரது சுயாதீனமான கருத்துக்கள் "ஒரு சூர்வாளின் நிழலில்" என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்துள்ளது. அவரது மரணத்தின் பின்னர் வெளியிடப்பட்ட இந்த புத்தகத்திற்கு 30.08.2015 திகதியிடப்பட்டு தமிழினி எழுதியுள்ள முன்னுரையில் நானீ உயிராக நேசிக்கும் மக்களிடம் எனீ தொனீடைக்குளீ அடைத்துக் கிடக்கும் சில உனீமைகளை சொல்லியே ஆக வேனீடும் எனீற உந்துதலினாலேயே இப்புத்தகத்தை எழுதியதாக அவரே குறிப்பிட்டுள்ளார்.

இந்த புத்தகத்தை எழுதியதற்காக வெளிநாடுகளிலுள்ள புலி ஆதரவு சக்திகளால் தமிழினி தூற்றுதலுக்கு ஆளானார். இலங்கை அரசுக்கு விலை போய்விட்டார் என ஒரு சாரார் கூறும்போதே மற்றொரு சாரார் இந்த புத்தகத்தை தமிழினி எழுதவே இல்லை என வாதிடுகின்றனர். இதேவேளை புலிகளின் மகளிர் அணிக்கு தலைமை ஏற்றுச் செயற்பட்ட தமிழினி நடந்து முடிந்த தவறுகளுக்கும், குற்றங்களுக்கும் மற்றவர்கள் மீது கையை காட்டிவிட்டு தப்பித்து விட முடியாது என புலிகளுடன் முரண்படுபவர்களாலும் அவர் விமர்சிக்கப்பட்டுள்ளார்.

எது எப்படியிருந்தபோதும் தமிழினியின் கடந்த காலம்பற்றிய விமர்சனங்களும் எதிர்காலம் குறித்த பார்வையும் புயல்போல் வீசும் பொய்களுக்கிடையில் மெதுவாகப் பேசப்பட்ட உனீமைகளீ.

சூர்வாளின் நிழலில் என்ற தனது புத்தகத்திற்கு தமிழினி எழுதியுள்ள முன்னரை முழுமையாக:-

தொடர்ந்து போராடுவேன்

இலங்கைத் தீவில் தமிழ் மக்களுடைய போராட்டத்தின் முக்கிய கட்டத்தில் எனது பங்களிப்பின் நினைவுகளையும் அது எனக்குத் தந்த அனுபவங்களையும் இந்த நூலில் பதிவு செய்ய முன்வந்திருக்கிறேன். இது எனது போராட்டத்தின் முழுமையான வரலாறு அல்ல. எனக்கு நினைவு தெரிந்த காலத்திலிருந்து கரை புரண்டோடிய காட்டு வெள்ளமாக நடைபெற்ற போருக்கூடாக அடித்துச் செல்லப்பட்ட என் வாழ்வின் கணங்களை அச்சொட்டாகப் பதிவு செய்தல் இலகுவான காரியமாக எனக்குத் தென்படவில்லை. இருப்பினும் நினைவழியாத் தடங்களாக நெஞ்சுக்குள் கனன்று கொண்டிருந்த நெருப்பை சிறிதளவு வெளியேற்றியுள்ளேன். என்று நான் கூற முடியும்.

எதற்காக இதனை எழுத வேண்டும் என்று என்னிடமே பலதடவை கேட்டுக்கொண்டேன் ஒரு பதில்தான் என்னை எழுத உந்தியது நான் உயிராக நேசிக்கும் மக்களிடம் என் தொண்டைக்குள் அடைத்துக் கிடக்கும் சில உண்மைகளைச் சொல்லியே ஆக வேண்டும் ஒரு இனத்தின் அரசியல் அபிலாசைகளை மீட்டெடுப்பதற்காக கருக கொண்ட எமது போராட்டமானது இலட்சோபலட்சம் உயிர்களின் தியாகத்தின் மீது கட்டியெழுப்பப்பட்டது இறுதியில் அதன் போக்கிடம் ஏனிப்படிப் பூச்சியமானது உலகமே அதிர்ந்து போய் கேட்டுக்கொண்ட கேள்வி இது.

போராட்டத்தை முழுவதுமாக தன்னகப்படுத்திக் கொண்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தில் நானும் ஒரு உறுப்பினராக இருந்தேன். போராட்டத்தின் இறுதி இருபது வருடங்கள் நானும் ஒரு சாட்சியாக போருக்குள்ளே வாழ்ந்திருக்கிறேன். போராளிகளான நாங்கள் எமது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை காப்பாற்றத் தவறி விட்டோம். கையிலெடுத்த ஆயுதங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக எமது அரசியல் இலட்சியத்தை தோற்கடித்து விட்டோம். இன்று எமது மக்களின் வாழ்வு பலநூறு வருடங்கள் பின்னோக்கிப் போய்விட்டதாகவே எனக்குப்படுகிறது. எதையுமே நம்பாதவர்களாக, எல்லாவற்றுக்கும் பயப்படுகிறவர்களாக, தமக்குள்ளேயே சிறுத்துப் போனவர்களாக, யதார்த்த உலகத்தை வெற்றிகொள்ள முடியாதவர்களாக வாழ்கிறார்கள். முப்பத்தைந்து வருடங்களுக்கும் மேலாக நீண்ட யுத்தத்தின் வடுக்களை இன்னமும் எமது சந்ததி தமது மனங்களில் சுமக்கிறது.

**எந்த ஒரு உயிரினமும் போராடினால்தான் வாழ்க்கை என்பது இயற்கையின் நியதி அந்த வகையில் எமது மக்களும் தமது அரசியல் உரிமைகளுக்காகப் போராட வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால், வரலாற்றின் கடந்த காலத்தில் வெற்றியடைந்த தேசிய விடுதலைப் போராட்டங்களில் இருந்த அனைத்து நியாயங்களும் எமது போராட்டத்தில் இருந்த போதிலும் கூட உலக மற்றும் பிராந்திய வல்லரசுகளின் நலன்களே எமது போராட்டத்தின் நியாயங்களை விடவும் பலத்தில் மேலோங்கியிருந்தன. பாலஸ்தீன மக்களின் போராட்டம் எம் கண்முன்னே இருக்கும் சிறந்த உதாரணங்களில் ஒன்று. இனியும் ஒரு ஆயுதப் போராட்டம் என்ற வழிமுறையில் எமது அடுத்த சந்ததி ஈடுபடுவதற்கு முன்னர் எமது சொந்த அனுபவம் தந்த பாடங்களையும் ஏனைய போராட்டங்கள் தரும் பாடங்களையும் அவசியம் சீர் தூக்கிப்பார்க்க வேண்டும் என்பதை என் ஆத்மாவிலிருந்து கூறுகிறேன். இந்த நாட்டில் இனியும் ஒரு இரத்த ஆறு பாயக்கூடாது எந்த அன்னையும் தனது பிள்ளையை பெற்றெடுத்த வயிற்றிலும், பிள்ளையை சுமக்கும் பிரேதப் பெட்டியிலும் அடித்துக்கொண்டு அழக்கூடாது. எமது எதிர்கால சந்ததி தமது அறிவாற்றலால் மட்டுமே உலகை வென்றெடுக்க இடைவிடாது முயல வேண்டும். நவீன உலகத்தின் புதிய தரிசனங்களை அவர்கள் நேரடியாக அனுபவிக்க வேண்டும். போர்க்களங்களில் உயிரைக் கொடுத்த வீரர்கள் ஒவ்வொருவரும் இந்த யுத்தம் எங்களோடு முடிந்து போக வேண்டும் என்று தான் எண்ணினார்களே தவிர அடுத்த சந்ததிக்கும் அது தொடர வேண்டும் என அவர்கள் நினைத்திருக்கவில்லை.

கடந்த காலத்தின் பாடங்கள் எமது சந்ததியை ஆரோக்கியமான வெற்றிகரமான பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டும். இந்த நாட்டின் மக்களுக்கும் எதிர்கால சந்ததிக்கும் நான் செல்ல நினைக்கும் செய்திகளை எந்தளவிற்கு வெற்றிகரமாக சொல்லியிருக்கிறேன் எனத் தெரியவில்லை. ஆனால், அதற்காகப் பெரிதும் முயற்சித்திருக்கிறேன். இந் நூலின் பெரும் பகுதியைக் கனத்த இதயத்துடனும் தடையின்றி வழிந்தோடிய கண்ணீருடனுமே எழுதியிருக்கிறேன். எனது மாணவப் பருவத்தில் நான் சார்ந்த சமூகத்திற்கு ஏதாவது நன்மையான செயலை ஆற்ற வேண்டும் என்ற பெரு விருப்போடுதான் ஒரு போராளியாக மாறினேன். எனது வாழ்வின் இறுதி மூச்சுவரை ஒரு போராளியாகவே இருந்து மக்களுக்கு உதவ விரும்புகிறேன். ஆயுதம் ஏந்துவதன் மூலமோ அல்லது பழிக்குப்பழி வாங்குதலின் மூலமோ எனது சமூகத்திற்கும் நாட்டிற்கும் உலகத்திற்கும் எந்த நன்மைகளையும் நாம் செய்துவிட முடியாது என்பதை அனுபவத்தின் பாடங்கள் கற்றுத் தந்துவிட்டன.

அமைதியும் சமாதானமுமே எந்தவொரு சமூகத்தினதும் வளர்ச்சிக்கான இயல்பான சாத்தியப்பாட்டை உருவாக்கும் அந்த வகையில் எனது இறுதிக்காலம் வரை எனது சமூகத்திலும் நாட்டிலும் மட்டுமல்ல உலகத்தின் அமைதிக்காகவும் சமாதானத்திற்காகவும் எனது போராட்டம் தொடரும்.

உண்மையான சமாதானத்தின் வழியானது போருக்கான பாதையை விடக் கடினமானது என்பதையும் நான் உணர்ந்துள்ளேன். எத்தனை தடைகளைத் தாண்டி நாம் முன்னேற வேண்டியுள்ளது என்பதை அறிந்து கொள்வதற்கான ஒரு முன் முனைப்பே இந்த புத்தகம். மானுட நேயமும் உண்மையான சமூகப்பற்றும் கொண்ட ஆயிரமாயிரம் சமாதானப் போராளிகள் என்னுடன் கைகோர்த்து நிற்பார்கள் என்ற நம்பிக்கையுடன் எனது கைகளை சமாதானத்திற்காக உயர்த்துகிறேன்.

தமிழினி ஜெயக்குமாரன்
30.08.2015

இலங்கையில் சிறநீரக நோயின் ஆச்சரியமான பரவல்

இலங்கையில் 1991 இல் வடமத்திய மாகாணத்தில் பதவியா பிரதேசயத்தின் விவசாயிகளின் சிறுநீரக செயலிழப்பு ஆரம்பத்தில் அவதானிக்கப்பட்டது.

இன்று இலங்கையின் உலர்வலயம் முழுவதும் பரவலாக இந்த நோய் காணப்படுகிறது.

விவசாய இரசாயனப் பதார்த்தங்களான செயற்கைப் பசளை, களைநாசினி, பீடை கொல்லிகளின் பாவனையே இந் நோய் அதிகரிப்பிற்கு காரணம் என ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொசுபேற்று உரங்களிலும், களை நாசினிகளிலும் காணப்படும் பார உலோகங்கள் இதற்குப் பிரதான காரணமாகும்.

சிறுநீர், குருதி, நகம், தலைமயிர் ஆகியவற்றிலும் சிறுநீரக நேயினால் இறந்த நோயாளிகளின் உடலிலும் இந்த நச்சுப் பதார்த்தங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

விவசாய நச்சுக்களின் செறிவு அதிகரித்துக் காணப்படும் வன்னீரை அனுராதபுரம் பொலநறுவை மாவட்டங்களின் சிறுநீரக நோயாளிகள் அதிக காலம் உபயோகித்து உள்ளனர்.

யாழ் குடாநாட்டு நீரும் வன்நீராகவே காணப்படுகின்றது. இதனால் இங்கும் நீர் நஞ்சாகும் சாத்தியக்கூறுகள் அதிகம். இங்கும் சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சிறுநீரக செயலிழப்பிற்கு குணப்படுத்தும் சிகிச்சை முறைகள் இல்லை. மருத்துவ சிகிச்சையின் நோக்கம் நோய் மேலும் அதிகமடையாமல் தடுத்தல் ஆகும்.

வருமுன் காத்தலே மீகவும் அவசியமானது. இதற்கு பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்ளவும்.

- விவசாய இரசாயனப் பாவனையைத் தவிர்க்கவும் அல்லது குறைக்கவும்.
- முடிந்தவரை செயற்கைப் பசளைக்குப் பதிலாக இயற்கைப் பசளைகளைப் பாவிக்கவும்.
- வன்நீரைக் கொண்டிருக்கும் பிரதேசங்களில் கொதித்தாறிய, வடிகட்டிய நீரைப் பருகவும்.
- பாரம்பரிய அரிசிகளான பச்சைப் பெருமாள், முருங்கையன், மொட்டைக்கறுப்பன் மற்றும் எள்ளு, கொள்ளு, குரக்கன் போன்ற தானிய வகைகளை பயன்படுத்தலாம்.
- நீர்ப்பிடிப்பான பழங்கள் மற்றும் நீர்ப்பூசணி, வெள்ளரி ஆகியவற்றைச் சாப்பிடலாம்.
- புகைத்தல் மதுபானத்தை தவிர்த்தல்
- சீனி அதிகம் உட்கொள்ளலை தவிர்த்தல்
- பரசிற்றமோல் போன்ற மாத்திரைகளை தேவையற்று பாவிக்கக் கூடாது. வைத்தியரின் ஆலோசனைப்படியே பாவிக்க வேண்டும்.

(டாக்டர்கள் சி.ஜெயசுமண, ஆர்.சுரேந்திரகுமாரன், சி.எஸ். ஜமுனாநந்தா ஆகியோரால் தயாரிக்கப்பட்டு Jaffna Managers Forum வெளியிட்டுள்ள பிரசுரம் முக்கியத்துவம் கருதி மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.)

நன்றி: **Jaffna Managers Forum**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி ஒரு விதி செய்வோம்

பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவிட்டு முன்னேறுவதற்கான வழிகளை பார்ப்போம் என்ற சிந்தனை இயல்பாக இலங்கையின் அனைத்து தரப்பு மக்களுக்கும் இருந்தாலும் தமிழ் சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு அது கிடையாது.

இனப்பிரச்சினை, பொருளாதார ரீதியான ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சமூக அநீதிகள் தொடர்ச்சியாக நிலவுவதில் தான் இவர்களின் பிழைப்பே இருக்கிறது.

எப்போதோ தீவிரமான பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு சமூக பொருளாதார சிகரங்களை தொட்டிருக்க வேண்டிய நாடு இன்று குட்டிச்சுவராக நின்றிருப்பதற்குக் காரணம் இந்தப் பிரகிருதிகளே.

எமது நாட்டின் ஆதிக்க அரசியல், எமது நிர்வாக முறை, கல்வி, சுகாதாரம் உள்ளிட்டு சேவைத் துறைகள் எல்லாவறிலுமே பிரச்சினைகள் நிலவுகின்றன.

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் ஒருவன்கொலோ வன்சொல் வழங்குவது ஏன்" வள்ளுவரின் வாக்கு இன்சொல் பற்றியதாக இருந்தது. இன்று அதற்கு விரிவான அர்த்தம் இருக்கிறது.

சாதாரண மக்களை மதிக்காத எடுத்தெறிகின்ற நடை முறைகள் எமது அன்றாட வாழ்க்கை முழுவதும் விரவிக்கிடக்கின்றது.

நாம் முன்னேற முடியாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம் நாம் ஒளிமயமான பாதையில் செல்வதற்கு இது பெரும் தடையாக இருக்கிறது.

இனம், சாதி, பால், வர்க்கம் இவைதான் இன்று அம்மணமாக கோலோச்சுகின்றன.

இந்த ஏற்றத்தாழ்வினால் தான் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான, விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு பகுதியினர் செழிப்பாக வாழ்கின்றனர்.

உலகளாவிய அளவில் இந்த ஏற்றத் தாழ்வுகள் தான் பொதுவானவையாக இருக்கின்றன.

ஆனால், இந்த விதியை மாற்றுவதற்கான முயற்சிகள், போராட்டங்கள் வரலாறு முழுவதும் நடந்திருக்கின்றன.

வர்க்கம், நிறம், சாதி, பால் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள் கூட்டாகவும் தனித்தும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. வெற்றிகளும் பின்னடைவுகளும் ஏற்பட்டிருக்கின்றன: இன்று உலகளாவிய அளவில் பிரமாண்டமான சவாலாக புவி வெப்பமாதல் புவியில் மனிதர்கள் ஜீவராசிகள் வாழ்வதற்கான சாத்தியப்பாடுகள் - நிகழ் தகவாக- அச்சம் தரும்வகையில் குறைவடைவதாக உருவாகியிருக்கும் நிலமைகள் தொடர்பாக அக்கறை செலுத்த வேண்டியிருக்கிறது. மனிதர்கள் சமூக நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண்பதற்கு முன் மனிதர்களின் ஒட்டுமொத்த வாழ்வும் கேள்விக் குறியாகிவிடக் கூடிய சாத்தியப் பாடுகள் நிலவுகின்றன.

இவை பற்றி எந்தளவு தூரம் பிரக்ஞை நிலவுகின்றது. உதாரணமாக 30- 40 வருடங்களாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தேடலும் ஈவிரக்கமற்ற கொடிய யுத்தமும் அழிவும் என்று வாழ்ந்துவிட்டோம்

இன்னமும் இனப்பிரச்சினை மற்றும் சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பான தேடலில் ஈடுபட்டுள்ளோம்.

ஆனால், 2004 இல் நிகழ்ந்த இயற்கைப் பேரழிவு பற்றி, அடிக்கடி இன்றுவரை நிகழும் பேரனர்த்தங்கள் பற்றி அவளவு தூரம் பிரக்ஞை கிடையாது.

உலகம் முழுவதும் கிட்டத்தட்ட இதுதான் நிலமை ஈவிரக்கமற்ற சுரண்டல் நிலவுகிறது புவி கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு வெப்பமடைந்து வருகிறது. ஆனால், இந்த 2வது விடயம் பற்றிய பிரக்ஞை அவ்வப் போது தான் வெளிப்படுத்தபடுகிறது.

புவியையும் மனித குலத்தையும் சூறையாடும் முறை தான் இயல்பானது வழமையானது என்று ஒத்தக் கொள்ளப்படுகிறது.

அதே போல் தான் இலங்கையின் வழமையான இன்றைய சமூக பொருளாதார வாழ்க்கை முறைதான் இயல்பானது என்றவாறு தொடர்கிறது.

மனிதர்களும் இயற்கையும் அனுசரித்து இயங்கு வதற்கான அவசியம் பற்றிய அக்கறைகள் வேண்டும்.

அதிகாரவர்க்கம் வழமைபோல் இயங்கவே விரும்புகிறது. அரசியல்வாதிகள் தமது பகட்டான, ஆடம்பரமான ஆரவாரங்களுடன் வாழ விரும்புகிறார்கள்

வெகுஜனங்கள் அவலங்களுடனான அந்தரித்த வாழ்வையே அனுபவிக்கிறார்கள்

இந்த நிலை மாற வேண்டும் இந்தநிலை மாற்றத்திற்கான கோரிக்கை தொடர்ச்சியாக விடுக்கப்படுகிறது.

நிர்வாக இயந்திரம் -காவல்துறை, படை உட்பட - சமூகத்தின் மேலாக எப்போதும் உயர்த்தி வைக்கப்படுகின்றது.

உதாரணமாக காவல்துறை ஒரு அதிகாரமாக நிறுவப்பட்டிருக்கிறதே தவிர அது சேவைத்துறையாக இல்லை.

அதன் லஞ்சம் கெடுபிடிகள், போக்கிரித்தனங்கள் இயல்பானவை என ஒத்துக் கொள்ளப்படுகின்றன.

நீதித்துறையை நாடும் மனிதர்கள் வருடக் கணக்கில் காத்திருந்தலும் இயல்பான தென ஒத்துக்கொள்ளப்படுகிறது.

புதியதை உருவாக்குவது மனித வாழ்க்கையை இலகுபடுத்துவது பற்றிய பிரக்ஞை வேண்டும்.

உலகின் மீதான வளங்களின் மீதான ஆக்கிரமிப்பிற்காக அழிவு ஆயுதங்களை உற்பத்தி செய்வதும் மூலோபாய நிலைகளை உலகளாவிய அளவில் உருவாக்குவதும் கெடுபிடிப்போர் என்பன அன்றாடம் என்றாகிவிட்டது.

உலகின் சர்வாதிகார காட்டுமிராண்டி அரசுகள் பற்றி மத்திய கிழக்கிலும் உலகின் பிற பகுதிகளிலும் அன்றாடம் நிகழும் பேரழிவுகள் பற்றி எந்தச் சொரணையும் கிடையாது.

இலங்கையில் இனசமூகங்களின் சகோதரத்துவம் சாதி, பால், வர்க்க ரீதியான ஏற்றத்தாழ்வு நிலைமைகளில் சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னிறுத்தப் படவும் வேண்டும்.

எமது நாடுகளில் சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் நலிவுற்ற நிலையிலேயே காணப்படுகின்றன. இலவசக் கல்வி, இலவச வைத்தியம் பலவீனப்படுத்தப்படிருக்கின்றன. இவை மீண்டும் புத்துயிர் பெற வேண்டும். பொது வெளியில் பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதும் பொதுவாகவே சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும், நிர்வாகம், சேவை, அரசியல் துறைகளில் தீவிர மறுசீரமைப்பு அவசியப்படுகின்றன.

இலங்கையில் சுதந்திர ஆணைக்குழுக்கள் - அரசியல் யாப்பு மறுசீரமைப்பு என்பன சிறந்த முயற்சிகள் தான். ஆனால், அது சமூகத்தின் பெருவாரியான மக்களின் பிரச்சினைகளிற்கு இன சமூகங்களின் பிரச்சினைக்கு மற்றும் தீண்டாமைகள் தொடர்பாக எத்தகைய உள்ளடக்கங்களை கொண்டிருக்கப் போகிறது என்பது முக்கியமான விடயமாகும்

அரசியல்- பரிவார, அடியாள் தனமாக மாறியுள்ளது கொள்கை வழிப்பட்ட அரசியல் அருகிவருகிறது.

சமூக ஜனநாயக வகைப்பட்ட அரசியல் சக்திகள் இருக்கின்றன. அவை இருப்பதால் தான் இலங்கையில் அவ்வப்போது ஜனநாயக மாற்றங்கள் நிகழ்கின்றன. 1994 இலும் 2015 ஜனவரியிலும் அத்தகைய மாற்றங்களை அவதானிக்கலாம். ஆனால், அவை நீடித்து நிலவுவது இல்லை. சமூகத்தின் ஜனநாயக அபிலாசைகளை முழுமையாக நிறைவேற்றுவதும் இல்லை. ஆனாலும், மாற்றங்கள் இடையறாத ஜனநாயகப் புரட்சி இயக்கங்கள் நிகழ வேண்டியிருக்கிறது.

அரசியல் யாப்பு சீர்திருத்த இயக்கம் தொலை நோக்குள்ளதாக இடையறாத சமூகத் தொடர்பாடல் உள்ளதாக இருக்க வேண்டும்.

அதற்கு இலங்கையின் அரசியல் ஆதிக்க சக்திகள் இடமளிக்குமா என்பது கேள்விக் குறியே?

இராணுவவாத மனநிலை கொண்ட சக்திகள் இன்னமும் இலங்கையின் அரசியலில் ஆதிக்கம் பெறுகின்றன. அதே போல் சமூக நல்லிணக்கத்தில் விருப்பமில்லாத அதிதீவிரவாத சக்திகள் சகல இன சமூகங்கள் மத்தியிலும் காணப்படுகின்றன.

இவை எப்போதும் குரோதம், விரோதத்தில் காலம் தள்ளுபவை இந்த சக்திகளின் தனிப்பட்ட அரசியல் பொருளாதார நலன்களும் அதில் தங்கியிருக்கின்றன. இந்த சக்திகள் உருப்பட விடா.

ஆனால், நல்லியல்பு சமூக நல்லுறவில் அக்கறை கொண்ட சக்திகள் சகல தரப்பு மக்கள் மத்தியிலும் காணப்படுகிறார்கள். இந்த சக்திகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

நாட்டில் யுத்த வெறுப்பு, இராணுவவாத வெறுப்பு, இனவாத சக்திகளின் மீதான வெறுப்பு, சமாதானம் சமத்துவத்தை விரும்பும் சக்திகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

சமூகத்தில் இந்த வகைப்பட்டவர்களே பெருவாரியானவர்கள்

உலகளாவிய அளவிலும் இதுதான் உண்மை சமாதானம் ஜனநாயகம் சகிப்புத் தன்மையை விரும்பும் மக்களே ஏகப் பெருவாரியானோர்.

மக்களின் இந்த அபிலாசைகளை முன் கொண்டு செல்வதற்கு நாட்டிலும் பிராந்தியத்திலும் உலகளாவிய அளவிலும் இயக்கங்கள் தேவை. மார்க்ஸ் போல காந்தி போல மாட்டின் லூதர், சே போல நேரு, அம்பேத்கார் போல பெரியார் போல நம் காலத்து நெல்சன் மண்டேலா போல பிடல் போல உலக மானிடத்தின் துயரத்தை தலைவிதியை மாற்றியமைப்பதற்கான பிரக்ஞை கொண்ட உன்னதமான மனிதர்கள் வேண்டும்.

நம்பிக்கை தரும் மாற்..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

13 ஆவதின் கீழான அதிகாரப்பரவலாக்கல் முழுமையடையாதபடி தொடர்ச்சியாக அலட்சியம் செயயப்பட்டு வந்ததும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

- நில அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பது மக்கள் குழுவின் சில உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது. மக்கள் குழுவில் பொது அபிப்பிராயம் அவ்வாறில்லை.
- சட்டம் ஒழுங்கு மாகாண மட்டத்தில் முதலமைச்சருக்கு பதிலளிக்க கடமைப்பட்டது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எனினும் நாடு முழுவதும் இரண்டு பொலிஸ் இல்லை. ஒரே பொலிஸ் தான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- நாட்டின் பொது நிதியில் மாகாண சபைகளுக்கு 17 வீதமும் உள்ளூராட்சி சபைகளுக்கு 8 வீதமும் என்றே பரவலாக பரிந்தரைக்கப்பட்டது. சில உறுப்பினர்கள் மாகாணத்திற்கு 30 வீதமும் உள்ளூராட்சி சபைக்கு 10 வீதமும் என்று பரிந்துரைத்திருக்கிறார்கள் இந்தியாவில் 60 வீதம் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

சமூக பொருளாதார வாழ்வை ஜனநாயக மயப்படுத்துவது என்ற குறிக்கோளில் இது முரண்பாடானதாக, நெருடலானதாக காணப்படுகிறது.

- சமூக-சாதிரீதியாக (விளிம்பு நிலை) ஒடுக்கப்பட்ட வர்களுக்கான மேலதிக பிரதிநிதித்துவம் சமூகப் பாதுகாப்பு என்பன பரிந்துரைக்கப்பட்டது.
- தமிழர்கள் முஸ்லீம் மக்கள் மலையக மக்களுக்கான அதிகாரப் பேரளிப்புடன் மலாய் -பறங்கி இனமக்கள் அம்பாத்தோட்டைப் பகுதியில் பெருமளவு மற்றும் நாடு பூராவும் பரவலாக தெலுங்கு வம்சாவழி மக்கள் (விளிம்பு நிலை) அம்பாறை மதவாச்சி மற்றும் நாடு பூராவும் பரவலாக நீக்குறோவர் பரம்பரையினர் (விளிம்பு நிலை) புத்தளம் பகுதியில் வாழ்கிறார்கள் ஆதிவாசிகள் (விளிம்பு நிலை) இவர்களின் சமூக பொருளாதார கலாசார உரிமைகளும் பரிந்துரைக்கப் பட்டுள்ளன.
- பெண்களுக்கான இட ஒதுக்கீடு சகல சட்டவாக்க -நிர்வாக அமைப்புக்களிலும் 30 வீதமாக இருக்க வேண்டும் என்று பரவலாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது.
- அரசியல் யாப்பில் மனித உரிமைகள் அடங்கலான அடிப்படை உரிமைகளை உறுதி செய்வதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.
- தூய நீரைப் பெற்றுக் கொள்வதற்கான வழி முறைகள், இயற்கை வளங்களின் பாதகாப்பு, விவசாய மற்றும் உணவுப் பாதுகாப்பு, உள்நாட்டு விவசாயமுறை அதனுடன் தொடர்புபட்ட வாழ்க்கை முறையைப்பாதுகாத்தல், பிராணிகள் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் அபிவிருத்தியால் ஏற்படும் அழிவுகளிலிருந்து சூழலைப்பாதுகாத்தல்

எது எவ்வாறிருப்பினும் தமிழ் மக்கள் தரப்பில் பரவலாக சமஸ்டி முறையிலான தீர்வு வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

ஆனால், தெற்கில் சமஸ்டி பற்றிய புரிதல் எவ்வாறிருக்கிறது என்பது முக்கிய கேள்வி. ஒற்றையாட்சிக்கு அப்பால் தீர்வு காண்பதற்கான நெகிழ்வுத்தன்மை வேண்டும்

எனினும் அதிகாரங்களை தமிழ், மலையக, முஸ்லிம் மக்களுக்கு வழங்குவதில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றங்கள் மாற்றங்கள் காணப்படலாம்.

இலங்கையின் பல்லினப்பாங்கை உறுதிப்படுத்துவதிலேயே பல்லின சமூகங்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வதிலேயே இந்த நாட்டின் வெற்றி தங்கியிருக்கிறது. அண்டை அயலாரும், ஊரும் உலகமும் அதனைத்தான் எதிர்பார்க்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26 ஆவது தியாகிகள் தினம் ஜூன் 19


வீ. ஏ. கந்தசாமி

உபாலி கூரே

க. ரவீந்திரன் (இளங்கோ)

சி. புஸ்பராசா

இ. இரட்ணசபாபதி

உமாகாந்தன்

அரசியல் தலைவர்கள், கல்விமான்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், அரசு அதிகாரிகள் போன்ற பலர் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையினங்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்திற்கு பங்களிப்பை நல்கியதுடன் ஒவ்வொரு பிரஜையினதும் அடிப்படை ஜனநாயக உரிமைகளான கருத்துச் சுதந்திரம் பாதுகாக்கப்படுவதற்காகக் குரல் கொடுத்தனர். அமைப்பாகச் செயற்படுவதற்கான உரிமை நிராகரிக்கப்பட்டமையை எதிர்த்துச் செயற்பட்டனர். இவ்வாறு சமூக அக்கறையோடு செயற்பட்ட பலர் இதற்காகத் தமது உயிரை காவுகொடுக்க வேண்டியேற்பட்டது. அவர்கள் அனைவரையும் தியாகிகள் தின நாளில் நன்றியோடு நினைவு கூருவோம். இவர்கள் ஏக அதிகாரத்தை ஏற்க மறுத்தவர்கள். எல்லாரும் சுட்டவை என்பதற்கப்பால் கொலைக்கலாச்சாரத்தின் மூலம் எது. குறிக்கோள் எத்தகையது என்பதை இவர்களது மரணங்கள் உயர்த்தி உரைக்கும்.

அ. அமிர்தலிங்கம்

சிறி சபாரட்ணம்

விஸ்வானந்த தேவர்

ராஜன் சத்தியமூர்த்தி

சுந்தரம்

மனோ மாஸ்டர்

ராஜினி திரணகம

நீலன் திருச்செல்வம்

ஆனந்தராஜா

பஞ்சலிங்கம்

கு. இராஜதுரை

எஸ். கேதீஸ்வரன்

மதிமுகராசா

மகேஸ்வரி வேலாயுதம்

ரேலங்கி செல்வராஜா

எஸ். கணேசபிள்ளை (வரணியூரான்)

பாலநடராஜா ஐயர் (சின்ன பாலா)

சாம் தம்பிமுத்து

மு. கணேசகுமார் (ராசிக்)

விமலேஸ்வரன்

செல்வி

பெ. சூரியமூர்த்தி

சரோஜினி யோகேஸ்வரன்

செழியன் பேரின்பநாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org